**TAJ SAMUDRAH**
*Indian, Srilankan Restaurant*
260-A, EALING ROAD, WEMBLEY, MIDDX. HA0 4QD
Specialists in Catering for Weddings & Parties
* Over 100 Seat capacity
* For Parties over 100, we provide complimentary equipment & services free of charge
* 100 String Hoopers with sothi & sambol £15.00 only
Call: 020 8795 1616
7 Days 9 a.m. to Midnight



இலவசம்

The UDHAYAN

# உதயன்

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk | UN-22 | Apl. 2002 | For News & Advertising: 020 8952 5677 | Distributions : 020 8905 7775 | 20 பக்கங்கள்



தரத்தில்
சுவையில்
சுத்தத்தில்
சேவையில்
Niru No1
Tel:+44 208 640 8228


# தமிழ் காடையர் குழுக்களை களை எடுக்க மாநகர காவல்துறை கூட்டு நடவடிக்கை



இன்னும் சில வாரங்களில் தமிழ் காடையர் குழுக்களை களை எடுப்பதற்கான Pan London Organization என்ற நடவடிக்கைக் குழு ஒன்றை Metropolitan Police அமைக்க உள்ளது என ஹெண்டன் Serious CrimeGroup, DCI Richard Freeman உதயனுக்கு மே மாதம் 13ம் திகதி வழங்கிய சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் 22ல் செல்வராஜா சுரேஸ்குமார் (26) படுகொலை செய்யப்பட்டதன் விசாரணையை DCI Richard Freeman மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஹெண்டனில் அமைந்து உள்ள பொலீஸ் கல்லூரியில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ் சமூகம் பொலிஸாருடன் ஒத்தழைத்து வருவதாகவும் இது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.


(செய்தி தொடர்ச்சி 2ம் பக்கம்)



Hardwood & Laminate Flooring Centre
Quality Floor at Competitive Price at Hardwood & Laminate Flooring Centre
306 Honeypot Lane Stanmore
020 8204 2333

TEMPLE
020 8905 7775

Karahi Raja
Authentic North Indian Cuisine
FREE HOME DELIVERY
Minimum Order £15.00 * Within 3 miles radius
BANQUETING HALL AVAILABLE
Open 7 days a week including Bank Holidays 12.00 noon to Midnight
195 EAST LANE, NORTH WEMBLEY, MIDDX. HA0 3NG
Tel: 020 8904 5553

Yogi Ji's
Vegetarian
Egg Free Cakes
FRESH CREAM, BUTTER CREAM, NOVELTY & WEDDINGS
ANY SHAPES OR SIZE
658 Kingsbury Road, NW9 9HN
Tel 020 8204 6208
DIRECT TO YOGI
07811 275522

Triangle
Cars & Couriers
348 a High Road Wembley Middlesex HA9 6AZ
24 Hour Radio Control
Tel 020 8902 8888
Tel 020 8795 1414
Fax 020 8795 1313

C & S
DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
From £4.99 to £19.99
From £5.99 to £29.99
Only £ 9.99
9.99 £ 3.99
Fixed prices Best Prices
714-716 Kenton Road, Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sundays)
At very reasonable price Hall for Hire
Good facility near Alperton
TEL: 020 8903 6563

Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm and 6.00 pm to midnight
10% Discount on PARTY ORDERS & EAT-IN over £50
17 Ealing Road Wembley Middlx, HA0 4AA
Tel: 020 8900-8664 / 07939 587 338
020 8900 1990 Website: www.palmbeachuk.com

Your Dream Home Mortgages
Trouble GETTING a MORTGAGE?
You need to TALK to US for a BETTER DEAL
Mortgages | Buy to Let
Re-mortgages | No proof of Income
Adverse Credits | CCJ'S
Right to Buy | Self Certified
Bright Homes estate agents ltd
Call Aravin for a more a detailed & personal advice
49 North RoadSouthall, Middlesex, UB1 2JL
Tel: 020 8867 9696, Fax: 020 8867 9339, info@bright-homes.co.uk
Your home is at risk if you do not keep up a mortgage or other loan secured on it

CHARTERED
PAUL & Co
ACCOUNTANTS
Prompt & Friendly Service
Call for FREE first meeting
020 8427 2566

# தமிழ் காடையர்...

## 1 பக்கத் தொடர்ச்சி

Pan London Organization பற்றி குறிப்பிடும் போது இது இலண்டனில் உள்ள Metropolitan Police பிரிவுகளை இணைத்து வெவ்வேறு உள்ளாட்சிப் பிரிவுகளிலும் செயற்படும் தமிழ் காடையர் குழுக்களை இனம் கண்டு அவர்களை களை எடுப்பதே பிரதான நோக்கம் என அவ்வதிகாரி தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளாக தமிழ் காடையர் குழுக்களின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிச் சென்று கொடூரமான கொலைகள் வரைக்கும் சென்று உள்ளமை யாவரும் அறிந்ததே. புதிதாக அமைக்கப்பட்டு உள்ள கூட்டமைப்பு பிரச்சனைகளை கண்டறிந்து தமிழ் மக்களுடன் இணைந்து அந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதே அதன் நோக்கம் என றிச்சர்ட் பிறிமன் தெரிவித்தார். இந்த காடையர் குழுக்களை கனடாவில் மேற்கொள்ளப்பட்டது போல் பயங்கரவாத அமைப்புகளாக கருதி அதன் உறுப்பினர்களை சிறைப்படுத்தலாம் அல்லது வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் எதுவும் சாத்தியம் என பிறிமன் தெரிவித்தார்.

இந்த கூட்டமைப்பு பற்றி தொடர்ந்து விளக்கமளித்த பிறிமன் கிடைக்கும் ஆதாரங்களையும் புலனாய்வு அறிக்கைகளையும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். சில சமயம் தமிழ் சமூகத்தின் உதவியுடன் காடையர் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு அதன் தலைவர்கள் அடையாளம் காணப்படலாம் எனவும் பிறிமன் கூறினார். பொலிஸார் வேண்டிய தகவல்களை திரட்டி வருகின்றனர் எனவும் தமிழ் மக்கள் தமது பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் உதயனூடாக அவ்வதிகாரி தமிழ் மக்களை கேட்டுக் கொண்டார்.

ஹரோ, பிறன்ற் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பொலிஸாருடன் நல்லுறவை கொண்டு உள்ளனர் என்றும் எப்போதும் பொலிஸார் இன்னும் அதிகமாகவே எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த அவ்வதிகாரி தமிழ் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நம்பிக்கையை கட்டியெழுப்பவும் நல்லுறவை வளர்க்கவும் வேண்டும் என்றார். மேலும் தமிழ் மக்கள் பொலிஸாருடன் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளவும் புலனாய்வு மேற்கொள்ளவும் அது உதவும் என பிறிமன் எடுத்துக் கூறினார்.

பொலீஸ் படை காடையர் குழுக்கள் விடயத்தில் கடுமையாக நடந்து கொள்வதில்லை என தமிழ் மக்கள் கருதுகிறார்களே என கேட்ட போது, இதனை பொதுப்படையாக பேசுவது கடினம் எனத் தெரிவித்த றிச்சர்ட் பிறிமன் பிரச்சனை எமக்கு தெரிய வரும் போது எங்களிடம் உள்ள அனைத்து வழிங்களையும் பயன்படுத்தி அதனை தீர்க்க முயற்சி எடுப்பதாக அவர் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்த விளக்கமளிக்கையில் தங்களிடம் உள்ள ஆதாரங்கள் அடிப்படையில் தான் விசாரணையையும் வழக்கையும் நடத்துகிறோம் தடுப்பு காவலில் வைப்பதன் மூலம் அதனை செய்ய முடியாது. அதற்கு சட்டமும் இடமளிக்காது. பிணையில் செல்பவர்கள் சாட்சியத்தை பயமுறுத்த முயல்வதை எமது சட்டம் அனுமதிக்காது. அதற்கு ஏற்ப அது கையாளப்படும் என பிறிமன் குறிப்பிட்டார். கடைசியாக உதயன் வாசகர்கள் பொலிஸாருடன் ஒத்துழைத்து குற்ற செயல்கள் இல்லாத தமிழ் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்று பிறிமன் கேட்டுக் கொண்டார்.

காடையர்களின் தொல்லைகளை சந்திப்பவகள் **TAMIL HOTLINE 020 8733 3088** உடன் தொடர்பு கொள்ளவும். ---உதயன் நிருபர்

# ஈஸ்ஹாம் ரவுடிகளின் அராஜகம் தாங்கள் ரவுடிகள் இல்லையாம்!

திருமண வைபவத்தில் அட்டகாசம் பண்ணிய ரவுடிகள் தாங்கள் ரவுடிகள் இல்லை என ரவுடித்தனமாக தெரிவித்து உள்ளனர். மேற்படி திருமணத்தில் இவர்களின் அட்டகாசத்தை பிரசுரித்த உதயன் பத்திரிகையை இவ் ரவுடிக் கூட்டம் சில கடைகளில் இருந்து வெளியே எடுத்து கிழித்து உள்ளனர். எதற்காக இப்படிச் செய்கிறீர்கள் என கடைக்காரர் கேட்டதற்கு தங்களை ரவுடிகள் என எழுதியிருக்கிறார்கள் என அந்த ரவுடிக் கூட்டம் தெரிவித்து உள்ளது. மேலும் இனி மேல் உதயன் பத்திரிகையை கடையில் வைத்தால் தாங்கள் பிரச்சினை வரும் என்றும் அக்கூட்டத்தினர் கடைக்காரரை மிரட்டி உள்ளனர்.

ஏப்ரல் மாதம் வெளியான உதயனின் 21வது இதழிலேயே இச் செய்தி வெளியானது. கிழக்கு இலண்டனுக்கான விநியோகம் ஏப்ரல் 28ல் நடைபெற்றது. அவர்கள் அப்பகுதியில் விநியோகத்தை முடித்து வந்த பின்னர் கடைகளுக்குள் புகுந்த ரவுடிக்கும்பல் பலாத்காரமாக பத்திரிகையை கிழித்து எறிந்து அராஜகம் புரிந்து உள்ளது. இச்சம்பவம் பற்றி சில கடை உரிமையாளர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கி உள்ளனர். உதயன் நிர்வாகம் இது விடயமாக நியூஹாம் காவல்துறைக்கு உத்தியோக பூர்வமான முறைபாடை மேற்கொண்டு உள்ளது.

ஈழத் தமிழர்களிடையே புற்றுநோயாகப் பரவிவரும் இந்த சமூகவிரோத சக்திகளை மக்கள் மத்தியில் நடமாட அனுமதிப்பது ஆரோக்கியமான தமிழ் சமூகத்துக்கு ஆபத்தானது என உதயன் ஆசிரியர் டாக்டர் ரவிக்குமார் அவர்கள் தெரிவித்தார். இப்படியான சம்பவங்களை இன்று அனுமதித்தால் நாளை இந்த சமூகவிரோதிகளின் அராஜகம் மேலும் மேலும் வளர இடமளிப்பதாகும் என மீண்டும் கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் கவுன்சிலராக தெரிவு செய்யப்பட்டு உள்ள போல் சத்தியநேசன் உதயனுக்கு தெரிவித்தார். குற்றமற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்டடு உள்ள போல் சத்தியநேசனுக்கும் அவர் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்கட்சிக்கும் இந்த ரவுடிகளின் அராஜகம் சவாலாக அமைந்து உள்ளது. உதயனின் சென்ற இதழே ரவுடிகளின் கையில் சிக்கியது குறிப்பிடத்தக்கது. இந்த அராஜகச் செயலை கவுன்சிலர் போல் சார்ஜன் ஜோன் சவேஜ், இன்ஸ்பெக்ரர் கிறே மார்க் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்து உள்ளதாக குறிப்பிட்டார். இத்துஷ்பிரயோ செயலை கண்டிக்கும் வகையில் பத்திரிக்கை நிர்வாகமும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு: உதயன் பத்திரிக்கையை வாசகர்களுக்கு விநியோகம் செய்யும் கடையின் சொந்தக்காரர்கள் இதுபோன்ற செயல்களைகண்டு தயங்காது விநியோகம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்[illegible]. சமூகநோக்கோடு வெளிவரும் உதயன் பத்திரிக்கை சமூகத்திற்குள் பெருகிவரும் குற்றங்களை வெளியே கொண்டு வரும் ஒரே பத்திரிக்கை என்பது குறிப்படத்தக்கது. ஒருசில சமூகவிரோதிகளின் செயல்களைக்கண்டு பயந்து ஒதுங்காமல் சமூக காவல்துறையினருக்கு புகார் கொடுக்கவும். சமூக காவல் துறையினர் இதுபோன்றவர்களின் பேரில் இரகசிய நடவடிக்கை மேற்கொண்டு நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுத்துவருகின்றனர். புகார் கொடுப்பவரின் விபரங்கள் யாவும் இரகசியமாக வைக்கப்படும்.

# வெம்ளியில் இலங்கைத் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

## இனவாதிகளை மிஞ்சும் இலங்கைத் தமிழ் காடையர் குழுக்கள்

ஏப்ரல் மாதம் 22ம் திகதி வடக்கு இலண்டனில் 26 வயதான இலங்கைத் தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டார். சம்பவ தினம் மாலை எட்டு மணிக்கு சற்று பின் வெம்பளியில் உள்ள லையன் பார்க் அவனியுவுக்கு வந்தவர்கள் சுரேஸ்குமார் செல்வராஜா (26) என்பவரை அவரது வீட்டில் வைத்து சுட்டுவிட்டு ஓடி உள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக 13 இலங்கைத் தமிழர்களை அப்பகுதிப் பொலிஸார் கைது செய்து உள்ளனர்.

சுட்டு விட்டு ஓடியவர்கள் ஈலீங் றோட்டை நோக்கி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களில் தப்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது. சம்பத்ததுக்கு முன்னர் அங்கு வந்த அல்லது சம்பவத்துக்குப் பின் தப்பிச் சென்றவர்களை அவர்கள் பயன்படுத்திய வாகனங்களை யாராவது பார்த்து இருந்தால் தங்களிடம் தொடர்பு கொள்ளும் படி புலனாய்வுப் பிரிவு சுப்பிரின்டென் நிகல் மாவர் வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

இக்கொலை விசாரணை தொடர்பாக 19 முதல் 40 வயது வரையான 13 இலங்கைத் தமிழர்கள் வெம்பிளியில் உள்ள இரு முகவரிகளில் வைத்து கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படத்தப்பட்டனர். ஒருவர் வெம்பிளி நோத் சேர்ச் றோட்டிலும் மற்றும் பன்னிருவரும் பிரன்ட்வலே அவனியூவில் இருந்தும் கைது செய்யப்பட்டனர். அங்கிருந்து இரு வாள்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது.

கொலையாளிகள் லையன் அவனியூவில் வசித்த பிரதீபன் பரமலிங்கம் என்பவரையே கொலை செய்ய வந்ததாகவும் ஆனால் பிரதீபனின் மைத்துனர் சுரேஸ்குமார் செல்வராஜா தவறுதலாக இனம் காணப்பட்டு படுகொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்றும் அப்பகுதியில் இருந்து கிடைத்த உறுதிப்படுத்தப்படாத செய்தி ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் பிரன்ட்வலே அவனியூவில் வசிக்கும் சச்சி ராகுல்பிரியன் (26) பிரதீபன் பரமலிங்கத்தை கொலை செய்யப் போவதாக தொலைபேசியில் மிரட்டி உள்ளார். அதற்காக சச்சி ராகுல்பிரியன் பிரன்ட் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் மே மாதம் 6ம் திகதி ஆஜர்ப்படுத்தப்பட்டார். இவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய பன்னிருவரும் யூன ் மாதம் 26ம் திகதி நீதிமன்றத்திற்கு வரும் படி பணிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் இருவர் குடிவரவுப் பிரிவினரால் தற்பொது தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

இக்கொலைச் சம்பவத்துக்கும் தலை நகரில் இடம்பெற்ற ஏனைய சம்பவங்களுக்கும் ஈஸ்ற□ாம் ரவுடிகளுக்கும் இடையே தொடர்பு உள்ளதா என கேட்கப்பட்ட போது விசாரணைகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை என்றும் அது வரை எதுவும் கூறமுடியாது என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலை தொடர்பாக தகவல் கொடுக்க விரும்புபவர்கள் ஹென்டன் பயங்கர குற்றப் பிரிவு அதிகாரி டிசிஐ றிச்சர்ட் பிறிமென் உடன் 020 8358 1777 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.



FUNTASIA
The Party Shop
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Fantasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

PARTY INVITATION
SPECIALISTS IN PARTY PRODUCTS FOR ALL OCCASIONS
WEDDING DECORATIONS; CONTEMPORAY
DIWALI OFFER
BIG DISCOUNTS ON FIREWORKS
10% DISCOUNTS WITH THIS ADVERTISEMENT
10% விலைக் கழிவுகள் உண்டு
இவ்விளம்பரத்தை கோண்டு வருவோருக்கு





FOR THE A-Z OF PARTY PRODUCTS COME TO
171/173 HIGHSTREET NORTH, EASTHAM, E6 1JB
TEL 020 8471 9777

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# சற்குரு சுவாமிகளின் மகுடாபிஷேக ஏற்பாடு

லண்டன் எட்ஜ்வெயர் காயத்திரி மாதா திருஸ்தலத்தில் அடுத்த மாதம் ஜூன் 9ம் தேதி அன்று சற்குரு இரவிக்குமார சுவாமிகளின் முதலாம் ஆண்டு மகுடாபிஷேக விழா நடைபெற இருக்கின்றது. ஜூன் 7, 8, 9 ஆகிய மூன்று தினங்களும் காயத்திரி மாதா திருஸ்தலத்தில் மிக விஷேடமான முறையில் பூஜைகள், யாகங்களுடன் துவங்க உள்ள இவ்விழா 9ம் தேதி அன்று பெரியதொரு சிறப்பான விழா நாளாக கொண்டாடப்பட உள்ளது. பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய அளவிற்கு விழா மண்டப ஏற்பாடுகள் நடைபெறுகிறது.

# ஸ்ரீ-ராஜ-ஸ்ரீ சற்குரு சுவாமிகளின் முதலாம் ஆண்டு மகுட சூடல்



ஸ்ரீ-ராஜ-ஸ்ரீ சற்குரு சுவாமிகள்

எட்ஜ்வெயர் காயத்திரி மாதா திருஸ்தலத்தின் ஸ்தாபகரும் இந்து சமயத்தின் ஆசான தலைவருமான தவத்திரு சற்குரு சுவாமிகளின் முதலாம் ஆண்டு மகுட சூடல் வைபவ விழா வருகின்ற ஜூன் 7, 8, 9 ஆகிய திகதிகளில் எட்ஜ்வெயர் காயத்ரி மாதா திருஸ்தலத்தில் நடைபெற உள்ளது. இந்த வைபவம் இம்மூன்று தினங்களிலும் மிக பெரிய யாகங்கள் பூஜை என்று காலைமுதல் இரவு வரையிலும் நடைபெறும். இம்மூன்று தினங்களிலும் பொதுமக்களுக்கான இலவச சாப்பாடு சாப்பிடுவதற்கான ஏற்பாடுகள் பெரும் அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மாணவர்கள் ஈட்டும் கல்வித் தகமைகள் இனவாரியாக பிரிக்கப்பட திட்டம்

பள்ளிகளில் மாணவர்கள் ஈட்டும் தகமைகளை இனவாரியாக வெளியிட அரசாங்கம் கோரலாம் எனக் தெரியவருகிறது. மே மாதம் 6ம் திகதி இல 10 டவுனிங் ஸ்ரீற்றில் பிரதமர் பிளேயருடைய சிந்தனையாளர் குழு இது பற்றி ஆராய்ந்து உள்ளது. சிறுபான்மையினங்கள் பிரித்தானிய வெள்ளையின மாணவர்களிலும் குறைவாக தகமைகளை ஈட்டுகிறார்கள் என தெரிய வந்ததை அடுத்தே இது பற்றி சிந்திக்கப்பட்டு உள்ளது.

குறிப்பாக கறுப்பின ஆண்கள் சிறு வயதில் வெள்ளையின சக மாணவர்களைப் போல் தகமைகளைப் பெற்றாலும் 10 வயதுக்குப் பின் இவர்களின் தகமைகளில் வீழ்ச்சி ஆரம்பிக்கிறது. சில வெள்ளையின ஆசிரியர்கள் கறுப்பின மாணவர்களுக்கு ஆதரவளிக்காமல் அவர்களை பள்ளியில் இருந்து வெளியேற்றகின்றனர். விகிதாசாரத்துக்க முரணாக கூடுதல் கறுப்பின மாணவர்கள் பள்ளியில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

இனப்பாரபட்சத்தை தவிர்த்து சமத்துவத்தைப் பேண தகமைகள் இனவாரியாக பிரிக்கப்பட வேண்டும் என சிந்தனையாளர்கள் தெரிவித்து உள்ளனர். இதன் மூலம் சிறுபான்மையின மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகள் எல்லோரையும் போல் தகமை பெறுகிறார்களா என்பதை அவதானிக்க முடியும் என நம்பப்படுகிறது.

மேலும் கடந்த ஆண்டு தொழிற்கட்சி அரசால் மாற்றம் செய்யப்பட்ட 1975ம் ஆண்டு இன உறவுகள் சட்டம் இன சமத்துவத்தக்கான ஆணைக்குழுவுக்கு புதிய அதிகாரத்தை வழங்கி உள்ளது. இதன் படி பொது நிறுவனங்கள் இன சமத்துவத்துக்கு உட்பட்டு வேலை செய்கின்றனவா என்பதை கண்காணிக்கவும் தவறும் பட்சத்தில் விசாரணைக்கு உத்தரவிடவும் அவ்வமைப்புக்கு அதிகாரம் உண்டு.

# தஞ்சம் கோரும் சிறுவர்கள்

## உள்துறை அமைச்சின் கல்வித் திட்டம் பரபட்சமானது

தஞ்சம் கேட்கும் சிறுவர்களது கல்வி உரிமையை தடுக்கும் உள்துறை அமைச்சின் கல்வித் திட்டம் பாரபட்சமானது என பலரும் குரல் எழுப்பி உள்ளனர். Save the Children சிறுவர் அமைப்பு உள்துறை அமைச்சர் டேவிற் பிளங்கேற்றின் திட்டத்துக் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்ந்து வருகிறது. சிறுவர் சட்டத்தில் முன்னணியில் நிற்கும் சட்டவியலாளர் நிக் பிளேக் அரசாங்கம் தஞ்சம் கோரும் சிறுவர்களது அரசியல் நிலையை காரணம் காட்டி அவர்களுக்கு என்று தனியான கல்விப் பிரிவை தோற்றுவிப்பதாக குற்றம் சாட்டி உள்ளார். நிக் பிளேக் பிரதமரின் மனைவி செறி பிளேயர் தலைமையில் இயங்கும் மற்றிக்ஸ் சம்பேர்ஸ் அமைப்பின் கியூசி என்பது குறிப்பிடத்தக்கது. அவர் சிறுவர் தர்மஸ்தாபனத்துக்கு எழுதுகையில் ஆறு மாதங்களுக்கும் ஒரு குழந்தையை பிரதான கல்வி முறையில் இருந்து தடுப்பது அரசாங்கம் ஏற்றுக் கொண்ட ஐநா வின் குழந்தைகள் உரிமையில் இருந்து பின்வாங்குவதாக அமையும் என தெரிவித்தார். தொழிற்சங்கமும் அரசின் திட்டத்தை கண்டித்து உள்ளது.

உள்துறை அமைச்சின் தடுப்பு மையப் பாடசாலைகள் திட்டத்தை அரசாங்கம் சரியென வாதிடுகிறது. தஞ்சம் கோரும் சிறுவர்களுடைய கல்வி தொடர்பாக சில பிரச்சினைகள் இருப்பதாக குறிப்பிட்ட அரச பேச்சாளர் அதனை அரசு ஏற்ற முறையில் கையாள்வதாக குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆங்கிலத்தை முதல் மொழியாக கொண்டிராத மாணவர்களின் சடுதியான அதிகரிப்பு பாடசாலைகளின் வளங்களை கொண்டு சமாளிக்க முடியாது உள்ளதால் இத்திட்டம் ஆராயப்படுவதாக அப்பேச்சாளர் குறிப்பிட்டார். அவர் தொடர்கையில் அச்சிறுவர்களுக்கும் முழு நேர மற்றய மாணவர்கள் போன்று கற்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் அரசு இனவாதிகளுக்கு வளைந்து கொடுக்க முனைவதாக சிலர் குற்றம் சாட்டி உள்ளனர்.

## கவிப்பேரரசருக்கு பாராட்டு விழா

கவிப்பேரரசர் வைரமுத்துவுக்கு இலண்டனில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. கிழக்கு இலண்டன் ஈஸ்ற்ஹாமில் உள்ள மெட்ராஸ் உணவகம் இப்பாராட்டு விழாவை ஏற்பாடு செய்து இருந்தது. ஏப்ரல் 20ம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் 300க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். துபாய் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரும் மெட்ராஸ் உணவகத்தின் உரிமையாளர் திரு வீரா இப்பாராட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது என உதயனுக்கு தெரிவித்தார்.

சமூக அந்தஸ்துடன் கூடிய நிலையான வருமானம் மாதம் ஒன்றிற்கு £125 - £450வரை தேவையா? உடனே நாடுங்கள் உதயன் நிருபராக பணிபுரிய. ஆங்காங்கே செயலாற்றும் எமது பெரும் நிருபர் குழுவில் நீங்களும் ஒருவராகுங்கள். உங்களது புகைப்படமுடன் முழு பயோ டேடாவையும் வைத்து உடனே அனுப்பவேண்டிய முகவரி:
email: thelondon@udhayan.freeserve.co.uk (அ)
25-27 High Street Edgware, Middx. HA8 7EE
U.K.யின் தேசிய தமிழ் பத்திரிக்கையில் பங்குகொண்டு சமூக பெருமையை பெற்றிடுங்கள்*.
* 3 வருட ஒப்பந்தம் கையொப்பமிடல் அவசியம்.

நாளொன்றிற்கு £25 வீதம் மாதம் 6 நாட்கள் வரை நிரந்தரமாக வேலை வேண்டுமா?
உதயனின் விநியோகக்குழுவில் சேர உடனே உங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண்ணையும் பதிவு செய்ய அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்: 020 8952 5677

FOR SALE
Private Members CLUB
Lease for Sale
in East London
Tel: 01708 756 033
Between 11.00am - 4.00pm

இறையருள் அரசி அன்னை காயத்ரி



வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் 020 8952 7775

FREE COMPUTER COURSES*
*Subject to Registration Fee.
Employed or Unemployed
• Friendly environment
• Expert Trainers. Quality Teaching
• Flexible hours
• Latest Technology
• Hands-on training
• Open till late
• Recognised Qualifications
• Job Opportunity
•IT Taster •Internet •Word •Excel •Access •Web Design •Telematics •PC Maintenance •English (ESOL & SESOL) •NEBS Business/Management Training
Subsidised Courses
•A+Certs •MCP/ MCSE •CISCO - CCNA •CCNP • Oracle • Sage Accounts • Sage Payroll
You can book your courses at any of our Branches
Head Office:- North London ITeC, Hitech House, 193 The Broadway, London NW9 7DD, Tel: 0208 202 4646
South Harrow Branch: North London ITeC, 2nd Floor, Dawson House, 276 Northolt Road, South Harrow, Middx HA2 8EB, Tel: 0208 423 8485
Hendon Branch: North London ITeC, Techno House, 234 - 236 The Broadway, London NW9 6AG, Tel: 0208 457 4848
Approved Centre Accredited Trainers
Your 'Success is Guaranteed in the 'Home of IT'
Email: info@nlitec.com Website: www.nlitec.com

# அகதிகள் தற்போதைக்கு அனுப்பப்பட மாட்டார்கள் - பிரித்தானிய பிரதித்தூதுவர்

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை பிரித்தானியாவில் தஞ்சம் கோரியவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என இலங்கைக்கான பிரித்தானியாவின் பிரதித் தூதுவர் தெரிவித்து உள்ளார். யாழ் உதயன் பத்திரிகைக்கு அளித்த பதிலிலேயே பிரதித் தூதர் பீற்றர் ஹியூஸ் இதனைக் குறிப்பிட்டு இருந்தார். தற்போது சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை காரணம் காட்டி பிரித்தானிய அகதிகளை திருப்பி அனுப்ப முனைவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என தெரிவித்த பீற்றர் ஹியூஸ் இலங்கைக்கு வந்து சென்றவர்களின் நிரந்தர வதிவிட உரிமை பறிக்கப்படது போன்ற செய்திகளிலும் எந்த உண்மையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் சமாதான முயற்சிகளிலும் வடக்கு கிழக்கு பகுதிகளை மீளப் புனலமைப்பதிலும் பிரித்தானியா மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. யாழ் பல்கலைக் கழகத்தில் பிரித்தானிய கவுன்சிலின் கிளை ஒன்றைத் திறக்கவும் திட்டமிடப்பட்டு வருகிறது. அண்மையில் பிரித்தானிய மருத்துவக் குழு ஒன்று யாழ் சென்று வந்தது குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனில் இருந்து தமிழ்க் குடும்பம் திருப்பி அனுப்பப்பட்டது

ஜேர்மனியில் கடந்த ஏழு ஆண்டுகள் வாழ்ந்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அண்மையில் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். பத்மநாதன் சூரியகலா(49), பத்மநாதன் பத்மபிரியா(18), பத்மநாதன் கவியுகன்(17), பத்மநாதன் சிவப்பிரியா(15) ஆகிய நால்வருமே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர்.

பத்த ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் முக்கிய புலம்பெயரும் நாடாக இருந்த ஜேர்மனி சர்வதேச அளவில் பெருமளவு அகதிகளை உள்வாங்கிய நாடாக இருந்தது. தொடர்ந்து வந்த பேர்லின் அரசுகள் குடிவரவு விதிகளை மிகவும் அழுத்தி ஜேர்மனிக்கு வரும் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையை வெகுவாக குறைத்துக் கொண்டனர். இன்று தஞ்சம் கோருவோர் பெருமளவில் வந்தடையும் நாடாக உள்ள பிரித்தானியா ஜேர்மனது குடிவரவுக் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என வலதுசாரிகள் கோரிவருவது தெரிந்ததே.

# திருப்பி அனுப்பப்பட்டவர் தமிழ்க்கைதி சிறையில் மரணம்

தங்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்த குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்ட தமிழ்க் கைதி ஏப்ரல் இறுதி வாரமளவில் காலமானார். 1988ல் கனடாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இவரும் அதே சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட 14 கைதிகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட மேலும் 15 கைதிகளும் ஏப்ரல் 10ம் திகதி முதல் நீர்கொழும்புச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்தனர். இப்போராட்டத்தின் 10ம் நாள் மயக்கமுற்று விழுந்த திருமலையைச் சேர்ந்த இந்த இளைஞர் சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

புரிந்துணர்வு பற்றி பேசப்பட்ட போதும் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் பல ஆண்டுகளாக தடுத்து வைத்திருக்கும் தமிழ்க் கைதிகளை விடுவிக்க இன்னும் எந்த முயற்சியும் செய்யவில்லை.

SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

# நாடு திரும்பும் இலங்கைத் தமிழர்கள்

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மீண்டும் தமது தாயகம் திரும்ப ஆரம்பித்து உள்ளார்கள். மேலும் அங்குள்ள புலம்பெயர்ந்த மக்களை மீண்டும் பாதுகாப்பாக இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன சென்னை செல்ல உள்ளார். எந்த வித ஏற்பாடுகளும் இல்லாமல் அவர்கள் நாட்டுக்கு வரும் பட்சத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய முடியாது போய்விடும் என அமைச்சர் கருத்து வெளியிட்டு உள்ளார்.

இலங்கை இனப் பிரச்சனையால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களை இந்தியாவே பெருமளவில் ஏற்றுக் கொண்டது. தமிழகத்தில் தஞ்சம் பெற்ற 120,000 பேர் தஞ்சம் பெற்றனர். இவர்களில் 50,000 பேர் முகாம்களுக்கு வெளியே உறவினர் நண்பர்களின் உதவியுடன் வாழ்கின்றனர். முகாம்களுக்கு உள்ளே 70,000 க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். மூன்றாம் உலக நாடான இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழே பல மில்லியன் பேர் வாழ்ந்தாலும் தஞ்சம் பெற்ற தமிழர்கள் வாழ்வதற்கு தமிழகம் கடந்த 18 ஆண்டுகளாக இடம்கொடுத்து வந்தது. ஆனால் 1991 ராஜீவ் காந்தியின் படுகொலையை அடுத்தும்கூட இவர்களுக்கு உதவிகள் செய்து வருவது பெருமைக்குறிய விடயமாகும். இன்று மேற்கத்திய நாடுகளுக்கு வந்தும்கூட எம்மக்கள் இந்திய மக்களின் உதவிகளை பலவழிகளில் பெற்று வருகின்றனர் வியாபார ரீதியாக. சினிமா, இசை, நடனம் என்றும் வியாபாரப் தேவையான பொருட்கள் இறக்குமதி செய்வதுவரை, தமிழகம் தாய்பாசமுடையதுதான் என்று மெய்ப்பின்றது. ஆனால் தன்னை தனையன் என்று சொல்லும் எம் மக்கள் அத்தாய்க்கு துரோகம் இழைக்காமல் விட்டால் சரி. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது என்பது பயனல்ல என்பது யாவரும் அறியவேண்டிய உன்மை என்பது குறிப்பிடதக்கது.

குறிப்பு: இங்கிருந்து வியாபாரிகளாக செல்லும் சிலர் அங்குள்ள மக்களை ஏமாற்றி உள்ளதாக உதயனுக்கு வந்துள்ள உன்மை செய்திகள் தெரிவிக்கின்றது.

# சில மேற்குத் தமிழ் இளைஞர்களின் கேடு கெட்ட செயல்கள்

தமது உயிர் காக்க அயல் நாடான இந்தியாவில் தஞ்சமைடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைத் தமிழர்களே ஏறி மிதிக்கின்றனர். இம்மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எல்லையில்லாதவை.

மேற்கு நாடுகளில் இருந்து தமிழகம் செல்லும் சில இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அங்குள்ள சில பெண்களையும் சிறுமிகளையும் தமது வெளிநாட்டு அந்தஸ்தைக் காட்டி தமது பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்தி விட்டு கைவிட்டு வருவதாகவும் இன்னும் சிலர் இளம் சிறுமிகளையே மணம் முடித்து வருவதாகவும் பரமானந்தன் தெரிவித்தார். இதைவிடவும் தாய்லாந்து, சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளில் வெளிநாடு வருவதற்காக காத்திருக்கும் இளம் பெண்கள் சிலரை மேற்கு ஐரோப்பாவில் இருந்து சென்ற சில இளைஞர்கள் மணம் முடித்து அழைத்துச் செல்வதாக ஆசை காட்டி தமது தேவைகளை முடித்து வந்த சம்பவங்கள் தெரிந்ததே. தற்போது இந்தக் கயவர்கள் துன்பச் சூழலில் சிக்கி உள்ள ஏழ்மையான அகதித் தமிழர்களை தம் தேவைகளுக்காக பலியாக்கி வருகின்றனர்.

மேலும் பெரிய குடும்பங்களாக கூட்டாக வாழும் அகதித் தமிழர்கள் கல்வி கற்ற வசதியில்லாது குழந்தைகள் கூலிவேலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும் அங்கு சிறுமிகள் தாய்மை அடைவது போன்ற சம்பவங்கள் சதாரணமாக நடைபெறுவதாகவும் அங்கு விஜயம் செய்த தமிழர் ஒருவர் தெரிவிக்கிறார். அவர் தமது பெயரை குறிப்பிட விரும்பவில்லை.

## வரவுசெலவுத் திட்டம்
# குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு உதவுகிறது

ஏப்ரல் 14ம் திகதி வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் வேலை செய்யும் தமிழ் குடும்பங்களுக்கு பயனுள்ளதாக அமைகிறது. ஐரோப்பிய நாடுகளில் பிரித்தானியா குடும்ப நலனுக்கு ஆதரவில்லாத ஒரு நாடாகவே இருந்து வந்தது. தற்போது அந்த நிலைப்பாட்டை மாற்றி குடும்ப அமைப்பை பலப்படுத்தும் வகையில் அதற்கு ஆதரவான செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுகிறது. இதன்படி வேலைக்கு செல்லும் குடும்பங்களுகக்கு அவர்களின் மொத்த வருமானம் £58,000 க்குள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வருமான வரியில் இருந்து வாரத்துக்கு £25 வரை அடுத்த ஆண்டில் இருந்து வழங்க நிதி அமைச்சர் கோடன் பிறவுன் முன்வந்து உள்ளார். குடும்பத்தின் மொத்த வருமானம் £13,000 இலும் குறைவாக இருந்தால் வாரத்துக்கு £50 வரை வழங்கப்பட உள்ளது.

பெரும்பாலும் அனைத்து தமிழர்களின் வருமானமும் இந்த £58,000 வருமான எல்லைக்கு உள்ளேயே உள்ளது. சுப்பர் மாக்கற், உணவகங்கள் எரிபொருள் நிலையங்கள் போன்றனவற்றில் அடிப்படைச் சம்பளத்துடன் வேலை செய்பவர்களின் வருமானம் எல்லைக்கு உள்ளேயே உள்ளது. அவர்களுக்கு இவ்வுதவிக் கொடுப்பனவு சற்று ஆறுதல் அளிப்பதாக இருக்கும். இவ்வுதவிக் கொடுப்பனவுகள் அடுத்த நிதி ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட இருக்கிறது. வரி 1p அதிகரிக்கப்பட்டு அதில் இருந்து பெறப்படும் பணம் பிரித்தானியாவின் சீர்கெட்டுள்ள சுகாதார சேவையை சீரமைக்கப் பயன்படுத்தப்பட உள்ளது.

# மகாராணியின் பொன் விழா

வரும் யூன் மாதம் 4ம் திகதி மகாராணியின் பொன் விழாவை முன்னிட்டு கொமன்வெல்த் (பொதுநலவாய அமைப்பு) விழா ஏற்பாடு செய்யபபட்டு உள்ளது. 3000 கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ள பேரணி ஒன்று மொற்றி றொற்றி கலை நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதனை கொமன்வெல்த் கல்வி நிறுவனம் ஒழுங்கு செய்து உள்ளது. கொமன்வெல்த் அமைப்பின் பல்லின, பல்கலாச்சார தன்மையை வெளிப்படுத்தும் வகையில் இந்த 3000 கலைஞர்கள் பல்வகை கலைகளையும் இப்பேரணியில் காண்பிக்க உள்ளனர். குழுக்களாக பிரிக்கப்பட்டு தற்காப்புக் கலை, நடனம், பாடல், விளையாட்டு, இசை என பல்வகை கலைகளும் இப்பேரணியில் ஒரே வடிவத்துக்குள் ஒழுங்கு செய்யப்பட உள்ளது.

கொமன்வெல்த் அமைப்பை சித்தரிக்கும் இப்பேரணியை மகாராணி பார்வையிட உள்ளார். பல வண்ணங்களில் கவர்ச்சிகரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பேரணி பிரித்தானிய சர்வதேச தொலைக் காட்சிகளினால் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

சம்பவச் செய்தி கொடுக்க விரும்புவோர் தொடர்புகளுக்கு
020 8952 7775

A4ALL APPLIANCES
SALES, SERVICE AND PARTS
Fridge Freezers, Vacuum Cleaners, Washing Machines, Washer Dryer, Tumble Dryers, Dish Washers, Cookers & Microwaves, Hoover Bags
*Supplier of New, Graded & Reconditioned*
Tel: 020 8908 6171 Mob: 07985 565675
33 Court Parade, East Lane, Wembley HA0 3HS

தனிச்சிறப்பு ஹோமங்கள்
கணபதி ஹோமம், சண்முக ஹோமம், ருத்ர ஹோமம், துர்க்கா ஹோமம், காயத்ரி ஹோமம், சண்டி ஹோமம், சந்தான லக்ஷ்மி ஹோமம் போன்ற ஹோமங்கள் மிக சிறப்பான முறையில் சாஸ்திரமுறைப்படி பயின்ற நல் அனுபவம் வாய்ந்த பண்டிதர்களினால் காயத்ரி மாதா திருஸ்தலத்தில் மட்டும் நடத்தி கொடுக்கப்படும்.
சிறப்பான முறையில் ஹோமங்கள் செய்ய விரும்பும் பக்தர்கள் தொடர்புகளுக்கு
020 8905 7775

# உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிவு வெற்றியும் தோல்வியும்

கடந்த மே மாதம் 2ம் திகதி நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நான்கு தமிழ் வேட்பாளர்கள் கவுன்சிலர்களாக தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். இவர்களில் மூவர் தொழிற்கட்சி சார்பிலும் ஒருவர் லிபிரல் டெமொகிரட் கட்சி சார்பிலும் போட்டியிட்டு வெற்றி பெற்று உள்ளனர். மூன்றுக்கும் மேற்பட்ட தமிழ் வேட்பாளர்கள் தோல்வியைத் தழுவினர்.

ஈஸ்ற்ஹாம் தொகுதியில் Wall End வட்டாரத்தில் போட்டியிட்ட தொழிற்கட்சி வேட்பாளர் போல் சத்தியநேசன் கடந்த தேர்தலிலும் பார்க்க அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி ஈட்டி உள்ளார். தொழிற் கட்சியின் கோட்டையாக இருந்து வரும் நியூ□ாமில் 60 இடங்களில் 59 இடங்களை தொழிற்கட்சி வென்றுள்ளது. இத்தொகுதியில் அதிகப்படியான வாக்குகளை போல் சத்தியநேசனே பெற்று உள்ளார். அவரது வட்டாரத்தில் மட்டும் 1300க்கும் அதிகமான தமிழ் வாக்காளர்கள் வாழகின்றனர்.

மேலும் ஹரோ தொகுதியில் Roxbourne வட்டாரத்தில் திரு. மனோ தர்மராஜா தொழிற்கட்சி சார்பில் வெற்றி பெற்று உள்ளார். அதே தொகுதியில் Roxeth வட்டாரத்தில் தொழிற்கட்சியில் போட்டியிட்ட தயா இடக்காடரும் வெற்றி பெற்று உள்ளனர். லிபிரல் டெமொகிரட் சார்பில் கிங்ஸ்ரன் அப்போன் தேம்ஸ் தொகுதியில் சென் மார்க்ஸ் வட்டாரத்தில் போட்டியிட்ட எம் யோகநாதனும் வெற்றி பெற்று உள்ளார்.

தொழிற்கட்சி சார்பில் வடக்கு இலண்டனில் போட்டியிட்ட சுரேஸ், தயாபரன், சசிகலா ஆகியோரும் கிழக்கு இலண்டனில் ஜெயரஞ்சனும் தென் கிழக்கு இலண்டனில் கிறீன் பாட்டியில் நின்ற சின்னமணியும் தோல்வி அடைந்தனர். கொன்சவேடிவ் கட்சி கவுன்சிலாராக இருந்த கருப்பையா செல்வராஜா மற்றும் சதேக் கவுன்சிலராக இருந்த கரி கனகசபை ஆகியோர் தற்போது அப்பதவிகளில் இல்லை.

BURGES
FREE QUOTES
GUILD OF MASTER CRAFTSMEN
BURGES WINDOWS & BUILDERS
BURGES PROPERTY SERVICES
One Week in FLORIDA, USA
For Booking whole house
Contact us for a price to suit your budget!
117 BURGES ROAD• EAST HAM• LONDON E6 2BL
Tel: 020 8471 8760 Contact: Jasbir S. Mann
Tel: 020 8470 5061 Mob: 07831 858 140
Consumer Protection Association

# தொழிற்கட்சி தொடர்ந்தும் அதிகாரத்தில்

2002 உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தொழிற்கட்சிக்கு தொடர்ந்தும் அதிகாரங்களை வழங்கி உள்ளது. 1997ல் தேசிய அளவில் 18 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சிக்கு வந்த தொழிற் கட்சி 2005 வரை தனது தேசிய அதிகாரத்தையும் 2006 வரை தனது உள்ளாட்சி அதிகாரத்தையும் தக்க வைத்த உள்ளது. இரண்டாவது தடவையாக தேசிய அளவில் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சுகாதாரம், போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு ஆகிய துறைகளில் மிகவும் காரசாரமாக தாக்குதலுக்கு உள்ளானது என்பதும் ஐரோப்பாவின் மூன்றாம் உலகம் என முத்திரை குத்தப்பட்டதும் தெரிந்ததே. அதனால் மே 2 தேர்தலில் அக்கட்சி 9 உள்ளாட்சி மன்றங்களில் அதிகாரத்தை இழந்தது. தொழிற்கட்சியின் சரிவை எதிர்க் கட்சிகள் தமக்கு சாதகமாக மாற்றத் தவறியிருந்தது இத்தேர்தலில் தெரியவந்து உள்ளது.

1998 உள்ளாட்சி மன்றத் தேர்தலைக் காட்டிலும் இத்தடவை அதிகப்படியான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டு உள்ளனர். நடந்த தேர்தலில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்து உள்ளனர். ஆனால் 1998 உள்ளாட்சி மன்றத் தேர்தலில் 30 வீதத்துக்கும் குறைவானவர்களே வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

நடந்த உள்ளாட்சி தேர்தலில் தொழிற்கட்சி 9 உள்ளாட்சி மன்றங்களை இழந்து 58 உள்ளாட்சி மன்றங்களில் அதிகாரத்தை பெற்று உள்ளது. கொன்சவேடிவ் கட்சி 9 உள்ளாட்சி மன்றங்களைப் பெற்று 42 மன்றங்களில் அதிகாரத்தை பெற்று உள்ளது. 51 மன்றங்களில் முழுமையான அதிகாரம் எக்கட்சிக்கும் செல்லவில்லை. லிபிரல் டெமொகிரட் மேலதிகமாக 2 உள்ளாட்சி மன்றங்ளை பெற்று 15 உள்ளாட்சி மன்றங்களில் அதிகாரத்தை பெற்று உள்ளது.

FRANCO MAINTENANCE
*We Supply and Maintain*
AIR CONDITIONING
FRIDGES, DAIRY UNITS
ALL KINDS OF ELECTRICAL WORK
SHOP FITTINGS
CCTV CAMERAS
FOR A FRIENDLY AND EFFICIENT SERVICE CALL SUREN OR GERADE
FOR HOT LINE
07989 176 348 / 07870 646 392
TEL: 020 8286 9031 FAX: 020 8337 5787
ALL WORK GURANTEED NO CALL OUT CHARGES FREE ESTIMATION

## இலண்டன் உள்ளாட்சி மன்றங்களும் அதிகாரத்தைப் பெற்ற கட்சிகளும்

| தொழிற் கட்சி | கொன்சவேடிவ் கட்சி | லிபிரல் டெமொகிரட் கட்சி |
|---|---|---|
| Barking & Dagenham | Barnet | Islington |
| Bexley | Bromley | Kingston-Upon-Thames |
| Brent | Enfield | Sutton |
| Camden | Kensington & Chelsea | |
| Croydon | Redbridge | |
| Ealing | Richmond-Upon-Thames | |
| Greenwich | Wandsworth | |
| Hackney | Westminister | |
| Hammersimith & Fulham | | |
| Haringey | | |
| Hounslow | | |
| Lewisham | | |
| Merton | | |
| Newham | | |
| Tower Hamlets | | |

முழுமையான அதிகாரம் இல்லாதவை

Harrow
Havering
Hillingdon
Lambeth
Southwark
Walthamforest

Panesar Electrical Co.
*EST 1981*
மலிவு விற்பனை
12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs *Only £85.95*
12V LV Lamps 20W/35W/50W *Buy 10 for £10.00 and get 2 free!*
Mains Spotlight C/W 3x 50w Lamps *Only £23.95!* Chrome, Brass or White
Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit *Only £22.95! While Stocks Last!*
OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT
364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

ADVERTISE FOR BEST RESULTS 020 8952 5677
The UDHAYAN உதயன்

Air conditioning specialists
KS BUILDING SERVICES ENGINEERING LTD
- Free design & free survey
- Air conditioning and Refrigration systems
- Ventilation
- Eletrical installation & control system
- Portable air conditioning for sale
Website: www.kssiva.com
Email: sales@kssiva.com
FULLY QUALIFIED ENGINEERS
FOR A PROFESSIONAL SERVICE CALL 020 8200 8962
FAX: 020 8200 8918
MOBILE: 07799 142 759
237A Edgware Road, Colindale London NW9 6LU

# வலதுசாரி மூன்று இடத்தில் வெற்றி

பிரித்தானியாவில் நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரக் கட்சியான பிரித்தானிய தேசிய முன்னணி 3 வட்டாரங்களில் வெற்றி பெற்று உள்ளது. இத்தேசிய முன்னணி தனது அரசியல் வரலாற்றில் மூன்று இடங்களைப் பெற்றது இதுவே முதற் தடவையாகும். இவ்வெற்றி சிறுபான்மை இனங்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் பிரதான நீரோட்டத்தில் உள்ள மூன்று கட்சிகளும் அம் மக்களை வெற்றி கொள்ளத் தவறியதாலேயே இந்த தேசிய முன்னணி வெற்றி பெற்றதாக சில அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

1993ல் முதற் தடவையாக ஐல்ஸ் ஒப் டொக் பகுதியில் 7 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு ஆசனத்தை கைப்பற்றிய இத்தேசிய முன்னணி அடுத்த தேர்தலில் அந்த ஆசனத்தை இழந்தது. கடந்த ஆண்டு சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த இனக்கலவரம் இடம்பெற்ற வடக்கு இங்கிலாந்திலேயே இவ்வலதசாரிகள் 3 ஆசனங்களை தக்க வைத்த உள்ளனர். அண்மைக்காலமாக ஐரோப்பாவில் வளர்ந்து வரும் தீவிர வலதுசாரிக் போக்கு சிறுபான்மை இனங்களை மேலும் மேலும் அச்சத்தக்கு உள்ளாக்கி வருகிறது.

## இலண்டன் மேயரின் நேசக்கரம்

கட்சிக்கு வெளியெ நின்று மேயராக தெரிவு செய்யப்பட்ட இலண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன் தொழிற்கட்சிக்கு நேசக்கரம் நீட்டி உள்ளார். கடந்த மேயர் தேர்தலில் தொழிற்கட்சி வேட்பாளர் பிராங்க் டொப்சனுக்கு எதிராக லிவிங்ஸ்டன் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். முன்னாள் தொழிற்கட்சி உறுப்பினரான மேயர் லிவிங்ஸ்டன் அடுத்த தேர்தலில் தொழிற்கட்சியும் தானும் இணைய வேண்டும் என்றும் இல்லையேல் இந்தப் பிரிவால் கொன்சவேடிவ் கட்சியே இலாபம் அடையும் என்றும் தெரிவித்து உள்ளார்.

## பொது இடத்தில் துப்புவதை தடை செய்ய பா உ வேண்டுகோள்

பொது இடங்களில் துப்புவதை நிறுத்த தடை செய்ய வேண்டும் என பொப்லர் கம்டென் ரவுன் பா உ ஜிம் விற்ஸ்பற்றிக் தெரிவித்து உள்ளார். துப்புவதை தடைசெய்வதன் மூலம் ரிபி போன்ற மூன்றாம் உலக நாட்டு நோய்கள் பரவுவதை தடுக்க முடியும் என விற்ஸ்பற்றிக் தெரிவித்து உள்ளார். உலகில் நியூஹாமே 1000,000 மக்களுக்கு ரிபியால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வாழும் பகுதியாக உள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரிபி பரவுவதற்கு துப்புவதும் ஒரளவு காரணம் எனத் தெரிவித்து இருக்கும் அப்பகுதி சுகாதார அதிகாரி இந்நோயால் பாதிக்கப்பட்டவர் துப்பும் போது அந்நோய் பரவ வாய்ப்பு அதிகம் எனத் தெரிவித்து உள்ளார். வறுமை, அதிகப்படியான புலம்பெயர்பவர்களின் வருகை என்பன ரிபி பரம்பலுக்க முக்கிய காரணமாக உள்ளது.

துப்புவது சில சமூகத்தில் பிரித்தானிய பிரதான சமூகத்தைப் போல ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாக கருதப்படுவதில்லை என்ற கருத்தை விற்ஸ்பற்றிக் வெளியிட்டார். துப்புவது சில சிறுபான்மை இனங்கள் சம்பந்தமானது மட்டுமல்ல வெள்ளையர்களும் இந்த துர்ப்பழக்கத்தை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஹொலன்ட் வலதுசாரித் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

ஹொலண்டின் தீவிர வலதுசாரித் தலைவர் பிம் போர்ட்ருவைன் (53) மே மாதம் 6ம் திகதி வெள்ளையின டச் நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். 6 குண்டுகள் இவரது உடலில் பாய்ந்து உள்ளது. குடிவரவு, இஸ்லாம் ஆகியவற்றுக்கு விரோதமான கருத்துக் கொண்டு இருந்த இவ் வலதுசாரித் தலைவர் இஸ்லாம் ஒரு பிற்போக்கு வாதக் கலாச்சாரம் என்றும் குறிப்பிட்டு வந்தார். மே 15ல் நடக்க இருந்த பாராளுமன்ற தேர்தலில் இவருடைய கட்சி 20 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் என புள்ளிவிபரங்கள் தெரிவித்து இருந்தன. 150 ஆசனங்களுக்கான பொதுத் தேர்தலில் இவ்வலது சாரிக் கட்சி 35 ஆசனங்களை தக்க வைக்கும் என நம்பப்பட்டது. விரோதமான கருத்துக்களை கொண்டிருந்தாலும் அதனை ஜயநாயக முறையிலேயே சந்திக்க வேண்டும் என ஐரோப்பியத் தலைவர்கள் இப்படுகொலை தொடர்பாக கருத்து வெளியிட்டு உள்ளனர்.

## தமிழர்களின் வசந்தகால விழாக்கள் ஆரம்பம

பிரித்தானியாவில் வசந்த காலத்தை தொடர்ந்து கலை, இலக்கிய, சமய விழாக்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்று வருகிறது. பல்சுவைக் கதம்ப விழாக்களுக்கு பல தமிழகக் கலைஞர்களும் வருகை தந்து உள்ளனர். மேலும் பலர் வரவும் உள்ளனர். இவ்விழாக்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்த போதும் பிரித்தானியாவில் மேலோங்கி வரும் ரவுடியிசம் பல குடும்பங்களை விட்டுக்கு உள்ளேயே பூட்டி வைத்து உள்ளது.

HOMOEOPATHIC
HEALTH CLINIC


* For Consultation and Medicines
* For your full confidential Lady Consultant
* 10% Discount with this Advertisement

Tel: 020 8574 4281
Fax: 020 8843 9220

159, The Broadway, Southall, Middx. UB1 1LP (UK)

MANOR FURNISHERS
For complete furnishing
Quality Beds - unbeatable price
Bargain International Ltd.
For Surgical Instruments
at Special Discount Rates
Call: 020 8514 8293
Mob: 07811 902 479
562-564, Romford Road
Manor Park - E12

HEATHROW KITCHENS
QUALITY KITCHENS & BEDROOMS
AT AFFORDABLE PRICES
020 8813 6952
Trade Accounts Welcome



140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
www.heathrowkitchens.co.uk
Guaranteed to beat any competitive quote

1a VIVEASH CLOSE
(OFF NESTLES AVENUE)
HAYES,MIDDX, UB3 4RY
Tel:0208 573 0994

Imperial World
The Furniture Warehouse

40 STATION ROAD
(OPPOSITE MERTON ABBEY MILLS)
WIMBLEDON, LONDON, SW19 2LP
TEL.: 0208 542 0883

OPEN: MONDAY 10-6, TUESDAY CLOSED, WEDNESDAY,THURSDAY,FRIDAY & SATURDAY 10-6, SUNDAY 10-5

| | | | |
|---|---|---|---|
| FULL COLOUR BROCHURE AVAILABLE ON REQUEST<br>Solid pine bunk bed frame **ONLY £99**<br>Single mattresses from £30<br>Astra Solid pine 3' bedframe **ONLY £40** | WE BUY DIRECT FROM FACTORY AND SUPPLY SHOPS, THIS MEANS LOWER PRICES FOR YOU!!<br>Waverley 3' pine bedframe £69<br>Waverley 5' pine bedframe £99 | Cuban pine spindle bedframe with high footend (4" thick posts)<br>4'6" (double) £129<br>5' (king) £149<br>Aston pine rail-end bed (4" posts)<br>4'6" (double) £199<br>5' (king) £249 | Melody 3' metal bedstead £49<br>Wallace double bedstead £99<br>Metal frame bunk (splits into two singles) £99<br>Metal frame futon bunk £139<br>4'6" futon mattress £85<br>single mattresses from £30 |
| Hi-sleeper/study bunk with pull out chair/bed,metal frame £150<br>Study chair £19<br>2'6" futon mattress £49<br>Palermo 3-in-1 Guest Bed Can bed used as a single, two singles or a double **ONLY £199!!** | Twin sleeper bunk bed – single above & double below, frame £119<br>3PCE SUITES FROM £399<br>MACHINE WASHABLE LOOSE COVER 3PCE SUITES FROM £499<br>MANY MORE IN STOCK | Chelsea Dining table(4'x2'6") & 4 chairs £139<br>Sofia round table & 4 chairs £169<br>Montreal Dining table (5'x3') & 6 chairs £199<br>Dorian extending table (5'-6' x 3') & 6 chairs £299 | Buckingham dining table (6'x3') & 6 chairs £399<br>Nevada dining table (5'-6'x3') & 6 chairs £399<br>Shantilly dining table & 6 chairs £499<br>Emperor dining table (6'x3') & 6 chairs £599 |
| **Pine Bedroom furniture**<br>Flat packed for easy home assembly<br>1drw/1door bedside £29<br>3drw bedside £45, 4drw chest £70<br>3+2 chest £79, 4+2 chest £85<br>5+2 chest £95<br>Dressing table 4drw £69, 8drw £95<br>Double robe £130, triple robe £189 | Large selection of divan beds & mattresses – here are some examples<br>Mattresses:<br>Candy 3' £40, Hercules 3' £45<br>Quilted mattresses<br>Moorland 3' £49, 4'6" £69<br>Orthopaedic mattresses<br>Chesterley 3' £69, 4'6" £89<br>Backcare 3' £89, 4'6" £109<br>Single divan beds from £69<br>Double divan beds from £109 | **GERMAN BEDROOM FURNITURE!!**<br>Chests of drawers supplied assembled, wardrobes flat packed.<br>Bregenz triple wardrobe with center mirror £199<br>Monika 5 door wardrobe with center mirror £309<br>Bedside cabinets from £49 | Large range of SILENTNIGHT assembled bedroom and living room furniture available see catalogue in store.<br>MANY MORE ITEMS AVAILABLE. TOO MANY TO LIST. NEW LINES CONSTANTLY ARRIVING. PLEASE COME & BROWSE. |

# மகுடாபிஷேக சிறப்பு

## விழா ஏற்பாட்டுக்குழுவின் சிறப்புத் தகவல்

இந்து சமய தர்மத்தின்படி ஒரு இந்துவாக பிறக்கின்றவன் தனது வாழ்நாளில் 7 பெரிய ஆலயங்களின் (அதாவது இராஜ கோபுர விமானத்துடன் அமையப்பெற்றிருக்கும் ஸ்தலங்களின்) மஹாகும்பாபிஷேகங்களை காணவேண்டும். இல்லையெனில் தெய்வ திருத்தொண்டர்களாகிய இந்து மகாண்களின் மகுட சூடல்களின் வைபவங்களை காணவேண்டும். இது மாபெரும் பாக்கியமாகும். இதுபோன்ற புன்னிய வாய்ப்புகள் காணக்கிடைப்பின் அதை கண்டவனின் கர்மவினைகள் அகலும் என்று தர்ம ஸாஸ்திரப்படி நம்பப்படுகிறது. காரணம் கோபுரத்தின்மேல் நிற்கும் கலசத்திற்கு நடைபெறுகின்ற மஹா அபிஷேகமானது எதனை குறிக்கின்றதென்றால், ஆலயங்கள் என்பது மனிதனுடைய பாவங்களை தீர்த்து அவனுக்கு அருள் பாலிக்கின்ற புனிதமான இடமாகும். அந்த புனிதமான இடத்திற்கு சக்தியின் அடையாளங்களாக விளங்கும் பூரண கும்பங்கள் மனிதனுடைய பாவத்தை அகற்றி அவனுக்கு புனிதத்தை வழங்குகின்றது. அதனால்தான் நம் முன்னோர்கள் ஆலயங்களுக்கு பல விஷேஷங்களை நடத்தினாலும், பல விழாக்கலை நடத்தினாலும் கும்பாபிஷேகம் என்று ஒரு அபிஷேகத்தை வைத்து அந்த பிரதான கும்பத்தை சக்தி ஸ்வரூபமாக பாவித்து ஆச்சார முறைப்படி அனுஷ்டானங்களுடன் கும்பங்களுக்கு பூரண கும்பங்களை வைத்து அபிஷேகங்கள் செய்து தங்களது பக்தியையும் மறியாதையையும் வெளிப்படுத்தினர். இது கும்பாபிஷேகத்தின் சிறப்பு.

குரு மகுடாபிஷேகங்களுடைய சிறப்பு: இந்து சமயத்தின் சிறப்பற்று மகான்களாக விளங்கும் பிரதம குருவானவருக்கு (அதாவது தலைவனுக்கு) செலுத்தப்படுகின்ற வணக்கத்திற்குறிய மரியாதைதான் மகுடாபிஷேகங்களாகும். காரணம் ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் குருவின் வடிவமாக உருபெற்று நற்போதனைகளை மக்களுக்கு போதித்து இருக்கின்றார். அவன் போதித்த உன்மைகளை நன்நெறிகளை நீதி தவராது தமது துறவர வாழ்க்கையில் கைக்கொண்டு அதனை மக்களுக்கும் போதித்து நல்வழியில் நடத்தி தீமைகளிலிருந்து காப்பதனால் அவன் இறைவனுக்கு ஒப்பாகின்றான்.

அதன் அடிப்படையில் மிகப்பழமைவாய்ந்த இந்த இந்து சமயத்தில் மகான்களுக்கு மாத்திரமே இதுபோன்ற வைபவங்கள் சிறப்பான முறையில் செய்துவரப்படுகின்றது. குறிப்பு: தெய்வீக வாழ்க்கைக்கு தங்களை முழுமையாக அற்பனித்தவர்களுக்கு பட்டாபிஷேகம், மகுடாபிஷேகம், சொர்னாபிஷேகம் என்று அவர்களின் வழியில் பின்செல்கின்றவர்கள் அவர்களுக்கு தங்களின் மானசீகமான மரியாதையினை பக்தியுடன் செலுத்துகின்ற விதங்களே இதுபோன்ற வைபவங்களாகும். இதன் அடிப்படையில்தான் நாங்கள் எங்களின் குருமகானுக்கு மகுடாபிஷேக எற்பாடுகளை செய்துவருகின்றோம். காரணம் சற்குரு சுவாமி அவர்கள் மிக உயர்ந்த பட்டப் படிப்புகளை பயின்றிருந்தும், மிக சௌகரியமாக வாழும் வாழ்க்கை இருந்தும், அதற்கேற்ப வழிகள் இருந்தும் எதனையும் பெரிதென நினையாமல் தமது வாழ்க்கையை இந்த இளம் வயதிலேயே இறைவனுக்காக அற்பனித்து முழுமையாக தம்மை தெய்வீக பணிகளில் ஈடுபடுத்தி இனிவளரும் சமுதாயமும் வருகின்ற சமுதாயமும் இப்போழுது இருக்கின்ற சமுதாயமும் இறைவனுடைய அருள் மேலோங்கி இருந்தால்தான் வாழ்க்கை என்பது சுகமான ஒரு பயணமாக அமையும் என்பதனை அறியதக்க வகையிலும் அதனை உணர்ந்து வாழதக்க வகையிலும் சயத்திற்கென ஜாதி மத பேதம் பாராது இந்த அரும் தெய்வத்தொண்டினை அனைவரும் பெற்றிட இப்புணித பயணத்தை தொடர்ந்திருக்கின்றார். இந்த இளம் வயதில் அதுவும் மேற்கத்திய நாட்டில் தம்மை தெய்வத்திற்காக அற்பணித்து அதன்படி முழுமையாக செயல்படுவது என்பது மிகவும் பெருமையுடன் போற்வதற்குறிய ஒரு விஷயமாகும். நாம் இன்றைய உலகில் எவ்வளவு படித்திருந்தும் சம்பாதித்தும் சாதனைகள் செய்கின்ற போதிலும் மனஅமைதியை பெற முடிவதில்லை. இதுபோன்ற புன்னிய மகான்களுக்கு நம்மால் முடிந்த பனிவடைகளை செய்கின்ற போதும் அவர்களின் அருளுரைகளை கேட்கின்ற போதும் இவ்வுலக வாழ்கையில் சற்றேனும் அமைதி பிறக்கின்றது என்பதை நினைக்கும் போழுது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

சற்றுமுன் கூறியபடி நமது வாழ்நாளில் நமது வாழ்நாளில் இப்படி ஒரு மகுடாபிஷேக வைபவத்தை காண்பது மிக புன்னியமாகும். ஆகையால்தான் நாங்கள் இந்த காயத்திரி மாதா திருஸ்தலத்தில் இந்த வைபவத்தை ஏற்பாடுகள் செய்து வருகின்றோம்.

இவ்வைபவத்திற்கு குறைந்தது 5000 பேர்வரை 3 தினமும் கலந்து கொள்ள இருக்கின்றனர். இவ்விழாவினில் பல முக்கிய பிரமுகர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கின்றனர் என்பது குறி0ப்பிடத் தக்கது. காலை 10 - 10.30 மணியளவில் வேத-ஆகம-சாஸ்திர முறைபடி பிரதான பிராமண ஆச்சார்யர்களால் சற்குரு சுாமி அவர்களுக்கு திரு மகுட சூடல் நடைபெரும். அதனையடுத்து முக்கிய பிரமுகர்களின் வாழ்த்துரைகளுமு் சொற்பொழிவுகளும் நடை பெறும். பின்னர் சற்குரு சுவாமி அவர்களின் அருளாசி வழங்குதல் பின்னர் வருகை தந்திருக்கும் விருந்தினர் யாவருக்கும் பக்தர்களுக்கும் சாப்பாடு விருந்து உபசரிப்புகள் நடைபெற்று விழா பூர்த்தியடையும். ஜூன் 9ம் திகதி அன்று காலை பொது மக்களுக்காக சிறப்பு போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்று எட்ஜ்வெயர் காயத்திரி அம்மன் ஆலயத்தின் விழா ஏற்பாட்டு குழுவின் முகவர்கள் உதயனுக்கு தெரிவித்தனர்.

இவ்விழா வைபவங்களுக்கு கலந்துகொள்ள விருப்பமுடையவர்கள் மேலும் விபரங்களுக்கு 020 8905 7775, 020 8952 7775 தொடர்பு கொள்ளலாம்.

## GCSE - IT பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள்

இளவயதினரை GCSE பரீட்கைக்கு தயராக்குவதில் சாதனை படைத்த றைட் கல்லூரி தற்போது அரச பாடசாலையில் பரீட்சார்த்தமாக தனது பாடத் திட்டத்தை நடாத்தி வரகிறது. அரச பாடசாலை ஒன்று ஒரு பாடத்தை கற்பிக்க தனியார் கல்லூரிக்கு கட்டணம் செலுத்தும் திட்டம் இதுவே முதற் தடவையாக நடைபெறுகிறது.

வோல்தம்ஸ்றோ பகுதியில் உள்ள மூன்று இடைநிலைப் பள்ளிகளில் இருந்து கூடிய திறமையை எய்துபவர்களாக கருதப்படும் 12 - 15 வயது வரையான 13 மாணவ மாணவிகள் றைய்ட் கல்லூரி ஆசிரியர் குழுவால் 7 மாதங்களுக்கு பயிற்றப்பட்டு வருகின்றனர். இம் மாணவர் குழு தற்போது படத்திட்டத்தை முடிக்கும் தறுவாயில் உள்ளனர். இப்பரீட்சார்த்த திட்டம் வெற்றி அளிக்கும் பட்சத்தில் அதனை நாட்டின் மற்றய பாகங்களுக்கும் பரவலாக்க முடியும் என அக்கல்லூரியின் நிர்வாக இயக்குனர் மைக் றைட் தெரிவித்து உள்ளார்.

இவ்வாண்டு ஆறு வயதான கீதா தனநாதன் GCSE - IT பரீட்சைக்கு தோற்ற உள்ளார். GCSE - IT பரீட்சைக்கு தோற்றும் மிக இளம் மாணவியாக கீதாவே உள்ளார். தனிப்பட்ட மாணவருக்கு ஒரு மணிநேரத்துக்கு றைய்ட் கல்லூரி £19 ஐ கட்டணமாக அறவிடுகிறது.

Motability
New Picasso 1.6LX



முன்பணம் கட்டத்தேவையில்லை
NIL INITIAL DEPOSIT
3 Year Servicing, 3 Year Insurance
Includes
PAS, ABS
E/Windows
Remote C/Locking
Radio Cassette
A/Bags
Motability ACCREDITED
CALL TODAY 020 8578 2633
MEASHAM CITROEN
"Never knowingly undersold"
313-323 Greenford Road,
Greenford, Middlesex
Website: www.measham.citroen.co.uk
Email: measham@dealer.citroen.co.uk

Vacancy Cottage Linen Hire Ltd.
Cottage Laundry and Linen Hire seek a qualified/part qualified/OBE Accountant who will report directly to the MD to take charge of the company's increasingly demanding financial process. The finance role is definitely "hands-on so a proven record in credit control, payroll, budgeting, forecasting and stock control is essential. Excellent communication and IT skills together with spreadsheet and database experience are also expected. Salary negotiable.
Interested? Then apply in writing (enclosing your CV) to:
Shailesh Morjaria,
Cottage Laundry Ltd
847 Harrow Road, London
NW10 5NH

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

J.A.K.AUTOS
MOT FAILURE AND MACHINICAL REPAIRS AND BODY WORK UNDERTAKEN ALSO JAPANESE SECOND HAND CAR SPARES.
PLEASE CALL ISLAM ON 020 8991 5454
MOB: 07956 869 039
27/B AINTREE ROAD, PERIVALE MIFFLESEX UB6 7PL


NEW LIGHT HOUSE AUTO PLUS
WORKSHOP
MOT TEST CENTRE
Servicing Clutches, Brakes, Gearboxes, Engines, Exausts, etc.
Tel: 020 8520 0047
020 8521 3000
Fax: 020 8520 0048
72-73 Brunner Road, Walthamstow, London E17
FREE TYRE & BRAKE SAFETY CHECKS
All mechanical works undertaken unbeatable prices
Tyres, Exausts, Brakes,
Part worn tyre specialists
Balancing, Punctures, Tracking
Tel: 020 8521 9696
152a Hoe St., Walthamstow, London E17
(Corner of Hatherley Rd.)

பிறந்தநாள் மற்றும்
சிறு விளம்பரங்களுக்கு
020 8952 5677

ALLIED MOTORS U.K.
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Open: MON - FRI 8.30am to 7.00 pm
SAT 8.30am to 5.00pm
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

Our aim is to cut your petrol costs by half
AUTOGAS CONVERTERS
LP GAS Association
★ Environmentally friendly fuel
★ Longer engine life
★ Fully trained staff
★ 5yrs/60k miles warranty
★ Top of the range kits used
★ Multipoint Systems Av.
★ Free courtesy Car
★ Member of the largest network in UK
Tel: 020 8591 9292
Fax: 020 8591 9294
www.biglpg.com 13' River Rd, Barking

C.B.MOTORS (BALA)
ARCH NO 45
OFF ROXETH GREEN AVE
SOUTH HARROW
MIDDLESEX
HA2 8AA
TEL:020 8423 9984
PLEASE CALL BALA FOR AUTOMOTIVE NEEDS



BUYING AND SELLING ALL TYPE OF JAPANESE CARS (LESS THAN FIVE YEARS OLD)
LONG TERM CAR HIRE SERVICES ALSO AVALABLE FOR MINICAB DRIVERS
UNDERTAKING REPARES FOR VARIOUS CARS
SPECILISED IN BODY WORKS, AUTO ELECTRICAL WORKS, ACCIDENT REPAIRS, MOT ARRANGEMENTS ETC
AFRIENDLY GARAGE WITH VERY REASONABLE RATES

# சமூக பொலீஸ் பிரிவுக்கு ஆதரவு

உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கெற்றின் சமூக பொலிஸ் பிரிவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் ஆதரவு அளித்து உள்ளனர். மூன்று வார பயிற்சியுடன் கடமையில் அமர்த்தப்பட உள்ள இந்த சமூக பொலீஸ் படை இவ்வாண்டு இறுதியில் கடமையை ஆரம்பிக்கும் என தெரியவரகிறது. முதற்கட்டமாக 500 சமூக பொலிஸ் அலுவலர்கள் மத்திய இலண்டனிலும் குற்றச் செயல்கள் அதிகமுள்ள இடங்களிலும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இப் பொலீஸ் பிரிவுக்கு சந்தேக நபரை அரை மணி நேரம் வரை தடுத்த வைக்கவும் சந்தேக நபருடைய பெயர் முவரியை கேட்கவும் அற்ககோல் மற்றும் புகைப் பொருட்களை கைப்பற்றவும் அபராதம் விதிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இவர்கள் கை விலங்கு, பொலிஸ் தடி, ஸ்பிறே ஆகியவற்றை வைத்திருக்க முடியாது.

இந்த சமூக பொலிஸ் பிரிவு செலவுகுறைந்த காவல் பிரிவு என்றும் இவர்களால் குற்றவாளிகளை தடுக்க பெரிதாக உதவமாட்டார்கள் என்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இதனை பரிசோதித்து பார்ப்பது பயனுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

## TCHA வழக்கு முடிவு

# TCHA இனப்பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை

## TCHAஇன் நிர்வாகம் சீர்கேடானது-தினகரநாதர் மீண்டும் மேன்முறையீடு

ஏப்ரல் மாதம் 17ம் திகதி ஸ்ரட்போர்ட் தொழிலக நீதிமன்றத்தில் மூன்று நாட்கள் இடம்பெற்ற TCHA V தினகரநாதர் வழக்கு முடிவுக்கு வந்தது. TCHA விளம்பரப்படுத்திய இயக்குனர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் கடைசி வரை தினகரநாதர் என்பவரும் ஜெயதேவன் என்பவரும் போட்டி இட்டனர். ஆனால் அப்பதவி ஜெயதேவனுக்கே வழங்கப்பட்டது. இது நியாயமற்றது என்றும் தான் ஒரு சிங்களப் பெண்ணை மணந்து புத்தமதத்துக்கு மாறியதால் இனவேறுபாடு காட்டி தனக்கு அந்தப் பதவி மறுக்கப்பட்டது என்றும் தினகரநாதர் தொடுத்த வழக்கு TCHA - Tamil Community Housing Assosiation க்கு சாதகமாக முடிந்து உள்ளது. தனக்கு அப்பதவி கிடைக்காததற்கு இன்பாரபட்சம் தான் காரணம் என தினகரநாதர் நம்பியதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்றும் சட்ட விரோதமான இனப்பாரபட்சம் அங்கு காட்டப்படவில்லை என்றும் விசாரணைக் குழு முடிவு செய்து உள்ளது.

விசாரணைக் குழுவின் முடிவில் TCHAன் நிர்வாகம் சீர்கேடானது என்பது 'பகுதி 14ல்' இவ்வாறு விபரிக்கப்பட்டு உள்ளது. "The Tribunal believes that the Respondents' (TCHA) administration was muddled.....". மேலும் விசாரணைக்குழு TCHAன் நிர்வாகச் சீர்கேடுகள் பற்றிய பல கேள்விகள் பற்றி கவனம் எடுத்து உள்ளதுடன் அதற்கு வழங்கப்பட்ட பதில்களை கவனமானவும் சந்தேகத்துடனும் அணுகுகிறது என பகுதி 12ல் குறிப்பிட்டு உள்ளது. விளம்பரப்படுத்தப்பட்ட வேலைக்கு விண்ணப்பிக்கும் நபருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் ஜெயதேவனுக்கு இருக்கவில்லை என்றும் பின்னர் அத்தகுதிகள் (person specification) ஜெயதேவனுக்கு ஏற்றபடி மாற்றப்பட்டது என தினகரநாதர் குற்றம் சாட்டி இருந்தார். ஆனால் இக்குற்றச்சாட்டை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத விசாரணைக்குழு ஏன் அத்தகுதிகள் மாற்ற முடிவு எடுக்கப்பட்ட நாள் தவறாக திகதியிடப்பட்டது? கூட்டக் குறிப்பில் ஏன் அது குறிப்பிடப்படவில்லை? ஏன் ஜெயதேவனுடைய விண்ணப்பம் மட்டும் ஆரம்பத்தில் தவறவிடப்பட்டது? போன்ற கேள்விகளுக்கு முன் வைக்கப்பட்ட பதில்களே சந்தேகத்தடன் நோக்கப்பட்டது.

இறுதியாக தினகரநாதர் சான்றிதழ்களில் கூடிய தகுதி உடையவராக இருந்த போதும் அனுபவம் போன்ற மற்றய விடயங்கள் மட்டுப்படுத்தப்பட்டே இருந்தது என்ற தெரிவுக் குழுவின் முடிவு விசாரணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் தினகரநாதர் தான் ஜெயதேவனிலும் தகுதியானவர் என எண்ணியது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதையும் விசாரணைக்குழு சுட்டிக்காட்டி உள்ளது. ஆனால் தினகரநாதர் தெரிவு செய்யப்படாமைக்கு இனப்பாரபட்சம் காரணம் அல்ல என விசாரணைக் குழு முடிவு செய்து உள்ளது.

இத்தீர்ப்பு நியாயமற்றது என்றும் TCHAல் ஊழல் மூலமே ஜெயதேவன் அப்பதவிக்கு வந்ததாகவும் தினகரநாதர் இத்தீர்ப்புப் பற்றி கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் அப்பதவிக்கு ஜெயதேவனுக்கு தகுதியோ அருகதையோ கிடையாது என்றும் தான் மேன்முறையீடு செய்யப்போவதாகவும் தினகரநாதர் உதயன் அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாம் மீண்டும் மேன்முறையீடு செய்யப் போவதைபற்றி உதயனுக்கு தெரிவித்துள்ளார்.

குறிப்பு: இந்த செய்திகள் யாவும் ஆதாரமான முறையில் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடதக்கது.

# ஈஸ்ற்ஹாம் பொலிஸ் பட்டியலில் பல தமிழ் இளைஞர்கள்

ஏப்ரல் நடுப்பகுதியில் தனது கார் உடைக்கப்பட்டதை முறையிடச் சென்ற பேர்ச்சஸ் வீதியைச் சேர்ந்த பிலிப்ராஜ் என்ற இளைஞருக்கு சில அறியப்பட்ட தமிழ் இளைஞர்களின் புகைப்படங்கள் பொலிஸாரினால் காட்டப்பட்டு உள்ளது. தனது வீட்டுக்கு முன்னால் தன் கார் உடைக்கப்பட்டதை முறையிட சென்ற இவரிடம் யாரையாவது சந்தேகப்படுகிறாரா என்றும் இந்தப் பட்டியலில் யாராவது இருக்கிறார்களா என்றும் பொலிஸார் விசாரித்து உள்ளனர். அந்தப் பட்டியலில் காண்பிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஈஸ்ற்ஹாமை சுற்றித் திரியும் தமிழ் இளைஞர்கள் என பிலிப்ராஜா உதயனுக்கு தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளாக அப்பகுதியில் வாழும் பிலிப்ராஜா தனக்கு எதிரிகள் என்று யாரும் இல்லை என்றும் யார்? எதற்காக? இதனை செய்தார்கள் என்று தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

# அன்றும் இன்றும் உடல்நலம்

100 ஆண்டுகளுக்கு முன் பிரித்தானிய மக்களின் உடல்நலமும் தற்போது அவர்களின் உடல்நலமும் ஆய்வு செய்யப்பட்டதில் தற்போது அவர்கள் மிகுந்த ஆரோக்கியம் உடையவர்களாக உள்ளனர். எமது பெரியவர்கள் தாங்கள் அந்த நாளில் சாப்பிட்ட சாப்பாட்டினால் தான் இப்போதும் தெம்பாக இருப்பதாக மார்தட்டிக் கொள்வது இங்கு பிரித்தானியாவுக்கு பொருந்தாது. ஆனால் அவர்களது கூற்று விஞ்ஞான முறைப்படி ஆராயப்பட்டால் எங்களுக்கும் பொருந்தமா என்பது சந்தேகமே.

இன்று பிரித்தானியாவில் சராசரி ஆயுட்காலம் 80 வயதாக இருக்கிறது. சிசுமரணம் வெகுவாக குறைந்து உள்ளது. ஆனால் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சராசரி ஆயுட்காலம் 40 - 45 வயதாகவே இருந்தது. சிசுமரணம் அதிகமாக காணப்பட்டது. பிறக்கும் குழந்தைகளில் நான்கில் ஒரு குழந்தை மரணம் அடைகிறது. சில இடங்களில் சிசுமரணம் 50 வீதமாக இருந்தது. போசாக்கின்மை, தொற்று நோய்கள், மருத்துவ வசதியின்மை ஆகியன மரணத்துக்கு முக்கிய காரணமாக இருந்து உள்ளது.

இன்று வசதி வாய்ப்புகள் பெருகி மக்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றனர். அதனால் 100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவர்களைக் காட்டிலும் தற்போது பிரித்தானியர்கள் உயரம் 13 செ மீ அதிகமாகவும் நிறை 12 கிலோ அதிகமாகவும் உள்ளவர்களாக உள்ளனர்.

ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677
The UDHAYAN
உதயன்

UDHAYAN for your cost effective ADVT.

PATEL & Co.
Accountant Tax Consultant
At your service for over 15 years
For your Personal, Shop or Company Accounts
020 84513049
C.J. House
99A Cobbold Road,
Willesdun
London NW10 9SL

Basi & Co. Solicitors
• Buying or selling a house contact for free competitive quotation
• Landlord & tenant
• Immigration
• Wills
Other legal services
CRIMINAL DEFENCE
24 HOUR EMERGENCY SERVICE
Pager No 07654 578024
020 8518 1236
153 Cranbrook Road, Ilford, Essex IG1 4TA

AravindanS
Solicitors and Commissioners for Oaths
Sixteen years experience in conveyancing
Residential & Commercial
Tel: 020 8503 5034
Fax: 020 8471 7307
214 High Street North, East Ham, London E6 2JA

J K SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

ઈન્ડિયન ફ્યુનરલ સર્વિસ
INDIAN FUNERAL SERVICE
Established Since 1993
The First And only INDIAN Family owned INDEPENDENT Funeral Directors in England, Speak to us in English, Gujarati or Punjabi. All arrangements in accordance to individual religious rites, Washing and dressing facilities, Shiva Ashram of rest, Priest, Floral arrangements, Saturday and Sunday funerals arranged.
For any enquires, contact us day or night on
020 8361 6151
(24 hrs)
Chandu, Jay, Bhanubhai
Hansa or Jyoti
உங்கள் தேவையே
எங்கள் சேவை
Chandu Tailor 07957 250851
Ashwin Galoria 07836 252383
Please note our NEW Harrow Branch Address
Head Office:
Chani House,
Lower Park Road,
New Southgate,
London, N11 1QD
England
020 8361 6151
லண்டனில் முழுக்க இந்தியரின் நிர்வாகத்தில் இயங்குவதால் எம்மால் உங்கள் கலாச்சாரப்படி இணைந்து செயற்பட முடியும்.
Fax 020 8368 1008
www.indianfuneral.co.uk

தீராத
உங்களின் மன
வேதனைகள்
தீர்ந்திட,
உங்களின்
வாழ்க்கையில்
என்றும் வெற்றி
கண்டிட
தரிசியுங்கள்
அன்னையை
020 8905
7775

முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்கு
செய்து கொடுக்கப்படும்.
பொன்னுருக்களுக்கு ஏற்ற
சகல ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்
உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்



ROYAL JEWELRY
ரோயல் ஜுவலரி
287, High Street North
Eastham-Manor Park
London E12 6SL
Tel: 020 8472 5500

## SOLICITORS


# WARAN & COMPANY SOLICITORS

*Commissioners of Oath*

Community Legal Service
Specialist Help Point Immigration & Nationality

*Specialists in:*
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing

Call **Mr. S. K. Nageswaran** LLB
**Mrs. P. Nageswaran** LLB (Hons.), LLB (Lon)
on
**Tel: 020 8808 2397**

554 High Road, Tottenham, London N17 9SY    Fax: 020 8801 8818

# MANOGARAN & CO.

## SOLICITORS

Administrator of Oaths

Principal:
S. MANOGARAN LL.B
Member of the Law Society
Immigration Law Panel

LEGAL AID
WORK UNDERTAKEN

* Immigration and Asylum Matters
* Nationality Matters
* Civil Litigation
* Liquor Licencing

24 HOE STREET, WALTHAMSTOW, LONDON E17 4PH
Tel:: 020 8521 5757    Fax: 020 8521 8202

# கிறான்புறுக் சட்டத்தரணிகள்

கைலாஷ் சபாபதி ஆகியோரால் அண்மையில்
ஷெர்மன் அலிஸ் உருவாக்கப்பட்ட சட்ட நிறுவனம்.
ஜீவா டானியல்

நாம் கீழ்க்காணும் பட்டியல் உட்பட பல சட்ட பகுதிகளிலும் சிறந்த ஆலோசனையும் உதவியும் வழங்க பயிற்சி பெற்றவர்களும் நம்பகமானவர்களும்.

* குடிவரவு (Immigration)
* வீடு/கடை கொள்வனவு விற்பனவு (Conveyancing)
* குற்ற வழக்குகள் (Criminal Litigation)
* குடும்பம் (Family)
* பொது வழக்குகள் (Civil Litigation)
* சமூக பாதுகாப்பு உதவிகள் (Social Security Benefits)
* வீட்டு வாடகை பிணக்குகள் (Landlord & Tenant)
* விபத்துக்களினால் ஏற்பட்ட காயங்களுக்கான நட்டஈடுகள் (Personal Injury Compensation)
* காவல் நிலையத்திலான சட்ட ஆலோசனையும் உதவியும் (Advice & Assistance at Police Station)

We Undertake work in certain areas of law

தொலைபேசி: 020 8553 9944
தொலைநகல்: 020 8553 9985
முகவரி: 79 Cranbrook Road,
Ilford Essex
IG1 4PG

Cranbrook solicitors

**MARKANDAY & CO** **Solicitors** & Commissioners For Oaths 212 kiburn high road, london NW6 4JH.
TEL: 020 7624 6301 / 020 7625 43250

உங்களின்
வரி
விளம்பரங்களுக்கு
உதயன்
020
8952
5677

# RAJA & CO. SOLICITORS

Criminal Defence Service
Community Legal Service
Specialist Help Point Immigration Welfare Crime

LEGAL AID FRANCHISE
A QUALITY SERVICE
Approved by The Legal Aid Board

295 Balham High Road Tooting Bec London SW17 7BA
Tel: 020 8682 2585    Fax: 020 8682 2575
DX 34006 TOOTING NORTH

# Jeya & Co

SOLICITORS

**Commissioners of Oaths**
* **Immigration (We do legal aid)**
* **Conveyancing: Residential & Commercial**
* **Liquor Licencing**

**Principal: Malathy Jeyanantham LL.B**
**Associate: Kavina Ponnampalam LL.B**

**322, High street north, Manor park, london E12 6SA**
**DX: 4733 East Ham**
Contact us for prompt and proper services

# SRIHARANS SOLICITORS

Community Legal Service
Specialist Help Point Immigration & Nationality

AUTHORISED TO ADMINISTER OATHS
PROFESSIONAL SERVICE FOR FREEDOM AND JUSTICE UNDER THE HUMAN RIGHTS ACT 2000 OF UK AND WITH EUROPEAN CONVENTION ON HUMAN RIGHTS.

A. Sriharan
R. Sriharan
223 THE BROADWAY
SOUTHHALL, MIDDLESEX.
TEL: 020 8843 9974 (3LINES)
FAX: 020 8574 1766

# Genga & Co.

## Solicitors

Administor of Oaths

**Legal Aid Francise for Crime and Immigration**

Spcialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court

தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு
குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்டுரேட் நீதிமன்றம்,
பொலிஸ்நிலையம்"

**Genga & Co.**
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF
**E-Mail: Genga8co.wembley.ic24.net**

எந்தவிதமான அவசரத் தேவைக்கும்
24 மணித்தியால தொடர்பு இலக்கம்
**0956 569 559**
**Tel: 020 8795 5020**
**Fax: 020 8795 5030**

# Markandan & Co.

## Solicitors

Empowered to administer oaths
M.Markandan LL.B.

Tel: 020 8514 8188
Fax: 020 8514 8303

* Immigration,Home Office
* Refugee, Asylum
* commercial Conveyancing
* Matrimonial
* Licensing
* Representation at Police Stations
* House,Flat Purchase or Sale Etc.

Legal aid

Thamil House
720 Romford Road, Manor Park,
London E12 6BT

## HALL for HIRE

Hall suitable for Wedding, Birthday Parties, Meetings, Cultural Events, etc. Box Office Facility Availble, more than 200 seats, Standing+Sitting Capacity 350 people, newly furnished,I Floor, Car park, PA System, Kitchen, Water, Toilets, etc. For more details contact 020 8905 7775

The UDHAYAN
உதயன்
**ADVERTISE FOR BEST RESULTS**
**020 8952 5677**

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

IMPORTERS




IMPORTERS


# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*

**50% discount off RRP**




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

Styles AMAZING TILES Choice
Value Quality

DIRECT FROM FACTORIES TO YOU

Discount - 1/3rd Off - Wholesale Prices
Direct to Trade & Public

All Tiles on Displays carried in Stock
So, Hurry - Hurry - Hurry

OPEN 7 DAYS A WEEK
LATE NIGHT ON MONDAY

Come and see for yourself
and then tell your friends

Tel: 0208 83 84 900
Fax: 0208 83 84 495

45, Park Royal Road, London NW10 7LQ
(Opposite Asda)

# பட்டப்பகலில் கண்கட்டு வித்தைக் கொள்ளை ஆட்கள் இருந்த வேளையில் கைவரிசை

மார்ச் மாதம் 9ம் திகதி மதியமளவில் டக்னத்தில் நியூஸ் ஏஜன்ட் நடாத்தும் கிரிதரனது வீட்டில் நகைகள் களவாடப்பட்டு உள்ளது. காலை 11:45 க்கும் 12:30 க்கும் இடையே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்று உள்ளது. அன்று சனிக்கிழமை லொட்றி விற்பனை அதிகமாக இருந்ததால் விஜயதரனால் கடையில் என்ன நடக்கிறது என்பதனை கவனிக்க முடியவில்லை. 12:30 மணியளவில் தங்கள் குழந்தையை வைத்தியரிடம் காட்டிவிட்டு வந்த கிரிதரன் மேலே சென்று விட்டு திரும்பி வந்து சென்றவாரம் அப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளை பற்றி விஜிதரனுக்கு சொல்லிக் கொண்டு இருந்தார். அப்போது மேலே சென்ற திருமதி விஜிதரனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர்களது அறையில் உடுப்புகள் தாறுமாறாக இருந்தது. உடுப்புகளுக்குள் மறைத்து வைத்த நகைகளைத் தேடிய திருமதி கிரிதரனுக்கு எந்த நகையும் கிடைக்கவில்லை. தாலிக்கொடி உட்பட எல்லா நகைகளும் வீட்டில் இருந்த £600 பணமும் களவாடப்பட்டது.

கடைக்கு வந்த 8 கோசோவா நாட்டைச் சேர்ந்தவர்களே இக்கொள்ளையில் ஈடுபட்டதாக அக்களவு இடம்பெற்ற போது கடையில் காசாளராக நின்ற விஜயதரன் உதயனுக்கு தெரிவித்தார். 'மூன்று பெண்களும் 5 ஆண்களுமாக வந்தவர்கள் இருவர் கடையின் முன்புறம் சாமான்களை பார்த்துக் கொண்டு நின்றனர். மற்றும் இருவர் மேலே செல்வதற்கான வாயிலுக்கு அருகில் இருந்த வாழ்த்து மட்டைகளைப் பார்த்துக் கொண்டு நின்றனர். அதனால் யாரும் மேலே சென்றதைத் தான் கவனிக்கவில்லை' என விஜிதரன் தெரிவித்தார். ஆனால் தான் அவர்கள் மேலே செல்வதை கண்டு கொண்டு மேலே சென்றிருந்தால் தன்னை அடித்துப் போட்டு இருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# காற்றுக்கென்ன வேலி கொடுக்கல் வாங்கலில் குழப்பம்

நீண்ட காலமாக இந்தியாவில் தடை செய்யப்பட்டு இருந்து கடந்த பெப்ரவரியில் இலண்டனில் வெளியிடப்பட்ட காற்றுக்கென்ன வேலி திரைப்படத்துக்கான வெளியீட்டு தொகையை இலண்டன் விநியோகஸ்தர்கள் தனக்கு தரவில்லை என அப்படத்தின் இயக்குனர் புகழேந்தி பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டு இருந்தார். ஏப்ரல் மாதம் அவர் வழங்கிய அப்பேட்டியில் இப்படம் இலாபத்தை எதிர்பார்த்துச் செய்யப்பட்ட படமல்ல என்றாலும் முதலிட்ட தொகையை கூட முதலிட்ட தமிழக சிறு வியாபாரிகள் பெற முடியாமற் போனது வேதனையானது என புகழேந்தி மனவருத்தத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

காற்றுக்கென்ன வேலி படத்தை இலண்டனில் சேயோன் பில்ம் இன்ரநஷனலும் திருமுருகன் அறிவகமும் இணைந்து வெளியிட்டு இருந்தது. இது பற்றி சேயோன்........ நிறுவனத்தினரிடம் கேட்ட போது அதன் பொறுப்பாளர்களில் ஒருவரான ராஜ் தானும் இந்த விடயம் பற்றி அறிந்ததாகவும் தெரிவித்தார். 'நாங்கள் நேரடியாக புகழேந்தியிடம் படத்தை பெற்றுக் கொள்ளவில்லை. புகழேந்தியின் இலண்டன் முகவர்களுக்கு நாம் ஏற்கனவே பணத்தை செலுத்தி விட்டோம். தவறாக எங்கள் நிறுவனத்தின் பெயர் இச்சம்பவத்தால் பாதிக்கப்படுகிறது' எனத் தெரிவித்தார் ராஜ்.

புகழேந்தியிடம் இருந்து நேரடியாக படங்களைப் பெற்ற இலண்டன் முகவர்கள் செல்வகுமார், சோதி ஆகியோருடன் நாம் தொடர்பு கொண்டிருந்தோம். அவர்களும் தாங்கள் புகழேந்திக்கு வழங்கப்பட வேண்டிய £9,000 தொகையை கொடுத்து விட்டே படத்தை பெற்றுக் கொண்டதாக தெரிவித்தனர். 'புகழேந்தி வழங்கிய பேட்டி உண்மைக்கு புறம்பானது. நாங்கள் எங்கள் நன்மதிப்பை அவர் பாழ்படுத்தியதற்காக நட்டஈடு கோர வேண்டும்' என்று சோதி எமக்கு தெரிவித்தார். புகழேந்திக்கு நாம் தொடர்பு கொள்ள விரும்பி இத்தகவலை வழங்கினோம். ஆனால் இச்செய்தி அச்சுக்கு போகும் வரை அவர் தொடர்பு கொள்ளவில்லை. இச்செய்தியில் குறிப்பிட்டிருக்கும் முகவரின் பெயர் புகழேந்தி அவர்களிடமிருந்து செய்தி கிடைத்தபின் வெளியிடப்படும்.

## £40,000 பட்ஜட்டில்

# Secret Love - இரகசிய சிநேகம்

கீர்த்தி சினி ஆர்ட்ஸ் தயாரிப்பான Secret Love விரைவில் திரைக்கு வர உள்ளது. முற்றிலும் இலண்டனில் படமாக்கப்பட்ட முதலாவது முழுநீளத் திரைப்படம் இதுவாகும். குண்டு வெடிப்பில் பெற்றோரையும் பேச்சையும் இழந்த விநோத் என்ற இளைஞன் இணையத்தளத்தில் மதுமிதா என்ற நிஜமற்ற பெண்ணை காதலிக்கிறான். அதனை அறியாத அவனின் நண்பன் வசந்தனின் சகோதரி பிரிதா விநோத்தை காதலிக்கிறாள். இணையத்தளத்தில் வந்த மதுமிதா கற்பனை என விநோத் அறிகையில் அந்த மதுமிதா நிஜமாகிறாள்.

விறுவிறுப்பாக காட்சிகள் நகர்வதாக குறிப்பிடும் இப்படத்தின் இயக்குனர் கெ கீர்த்தி புலம் பெயர் சினிமாவில் கடந்த கால்நூற்றாண்டாக ஈடுபட்டு வருகிறார். இப்படத்தின் திரைக்கதை, வசனம் மற்றும் பாடல்களையும் இவரே எழுதி உள்ளார். இப்படத்துக்கான இசையை சங்கராஸ் இசைக் குழுவினர் வழங்கி இருக்கின்றனர். பாடல்களை ரவிசங்கரும் இந்துசிந்து இரட்டையர்களும் பாடி உள்ளனர்.

LEADING TOUR OPERATOR FOR DUBAI & EUROPE YOUR NO. 1 CHOICE
HARI AUM HOLIDAYS
Unique Low Cost Tours with A Touch of Culture!

SPECIAL REDUCED PRICE
DUBAI SHOPPING Tours
WEEKLY Leaves Saturdays
1st, 8th, 15th, 22nd & 29th June '02
Compare what our price includes before bookings
* 9 Days Dubai Shopping
* Special 22ct Gold Hari Om Surprise for all
* Free Raffles to win Gold throughout the tour
* City tour – Sharjah/Dubai
* Desert Safari with Bhangra, Raas/Garba, Belly Dancing. BBQ/Dinner
* Five lucky winners enjoy Dubai by night in a Chauffeur driven Limousine
* Vegetarian meals * With lots of surprise throughout the tour

TOURS TO EUROPE
* Switzerland & Paris - 5 Days £265 + £20 Trvl Insu
New Feature:
includes all excursions and breakfast and dinners in hotel
* Day out to Lucerne and Mount Titlis
* Day out to Gruyere Cheese farm and Nestle chockate factory
* Boat Cruise on lake Geneva from Vevey to Lausanne.
* Evening out in Paris. Boat cruise and dinner.
* Enterance to Eiffel Tower (1st Floor)
Departures - Every Tuedays
* Paris & Disneyland - 3 Days £139 + £12 Trvl Insu
* Amsterdam & Bruges - 3 Days £159 + £12 Trvl Insu
* Spain - 10 Days from £350 + £20 Trvl Insu
* Portugal & Gibraltor - 8 Days from £499 + £20 Trvl Insu

GOLDEN JUBILEE SPECIAL
* Paris & Disneyland 4 Days from £179
* Amsterdam & Bruges 4 Days from £199
includes whole day at Floriade (Flowers spectacular once evry ten years) & whole day at DeEfteling Park
Departures 1st June

SPECIAL ESCORTED CRUISE
Limited space upto 50% off Brochure Prices
MEDITERRANEAN 11 NIGHTS
Aboard Monterey
Departure: 10th June '02
For Further details: call Priti Patel on
020 8664 6687
Email: cruises@hariaum.com

FAR EAST
12 Days SINGAPORE & BANGKOK TOUR
Adult: from £1099
Child: £ £999
+ Trvl Insu £40
DEPARTURES NOW ON LAST WEEK OF EVERY MONTH
Wed 26th June

HURRY! LIMITED PLACES ONLY
Retail Agents for Major Atol Holders
CALL US FREE for details on other tours & services on
0800 092 1296
Visit our website: www.hariaum.com

All Holidays with Air Travel is operated by Atlantic & Pacific Travel Ltd. ATOL 2215
560 North Circular Road
Neasden, London NW2 7DP
Tel: 020 8452 0350
Fax: 020 8452 1144

No.1 Hindu Directory
For your Advt.
please contact
020 8952 5677

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS
gifts Souvenirs
and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

# பிரித்தானியாவை தாக்கி வரும் ஆஸ்த்மா

ஆஸ்த்மா நோயினால் பாதிக்கப்படும் நாடுகளில் பிரித்தானியா முன்னணி நாடுகளில் ஒன்றாக உள்ளது. அதிகப்படியான ஆஸ்த்மா நோயாளிகள் வாழும் நாடுகளில் பிரித்தானியாவும் ஒன்று. இங்கு 5 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு இந்நோய் இருப்பதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட வளர்ந்தவர்களில் ஆண்டுக்கு 500 பேர் உயிரிழக்கின்றனர்.

ஆண்டுக்கு 7000 பேர் - 10 வீதமானவர்கள் - வேலைத்தளங்களில் ஆஸ்ஸ்த்மா நோய்க்கு உள்ளாகிறார்கள். மருத்துவ தாதிகள், மரவேலை செய்வோர், ஆய்வுகூடத்தில் வேலை செய்வோர், வர்ணப் பூச்சு (Paint) போன்ற அலங்கார வேலைகளில் உள்ளவர்கள், மா சம்பந்தப்பட்ட பேக்கரிகளில் வேலை செய்வோருக்கு ஆஸ்த்மா நோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. மா துகள்கள், வர்ணப் பூச்சுகளில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள், உலோகங்கள் ஒட்டுதலில் வெளிவிடப்படும் புகை, மரத் துகள்கள், தொழிற்சாலை தொற்று நீக்கிகள் ஆகியன ஆஸ்த்மா நோயை ஏற்படுத்தும் காரணிகளாக உள்ளன. மருத்துவ தாதிகள் பயன்படுத்தும் லக்ரெக்ஸ் கையுறை அவர்கள் ஆஸ்த்மா நோய்க்கு ஆளாவதற்கான ஆரம்பக் காரணியாக உள்ளது.

இந்நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தேசிய சுகாதார சேவைகள் அமைப்புக்கு ஆண்டுக்கு £1 பில்லியன் செலவாகிறது. தொழிலகங்களில் ஆஸ்த்மா நோய்க்கு உள்ளாவவர்களின் எண்ணிக்கை மேற்குறிப்பிட்டதிலும் மிகவும் அதிகம் என தெரிவிக்கும் தொழிற்சங்க கூட்டமைப்பு இந்நோயின் தாக்கம் தேசிய சுகாதார சேவகள் அமைப்பு எதிர்கொள்ள வேண்டிய சுகாதார மற்றும் பொருளாதார வெடிகுண்டு என அஞ்சுவதாக குறிப்பிட்டு உள்ளது. தொழிலாளர்கள் இந்நோய்க்கு ஆளாவதால் £1.2 பில்லியன் உற்பத்தி இழப்பு நிறுவனங்களுக்கு ஏற்படுகிறது. இதனை அடுத்து நிறுவனங்கள் தமது தொழிலாளர்கள் இந்நோய்க்கு ஆளாகாமல் இருக்க புதிய நடைமுறைகளை கடைப்பிடிக்க சட்டப்படி பணிக்கப்பட உள்ளனர். இந்நடைமுறை இன்னும் சில மாதங்களில் நடைமுறைக்கு வர உள்ளது.

# A406 ஆல் இரைச்சல் தொந்தரவு

A406 பாதை அருகில் வாழும் பிறன்ட்குறொஸ் முதல் பின்சிலி வரையான மக்கள் இரைச்சல் தொந்தரவுக்கு ஆளாவதாக ஐக்கிய இராச்சியத்தின் இரைச்சல் அமைப்பு முறையிட்டு உள்ளது. இப்பாதை பிரித்தானியாவிலேயே மோசமான இரைச்சலுடைய வீதிகளில் ஒன்றாக உள்ளதாக இரைச்சலுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் தெரிவித்து உள்ளனர். இரைச்சல் அமைப்பின் அறிக்கையில் அது A வீதியாக இருந்தாலும் அது Motor Way ஆகவே பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பாதைக் குறியீடுகளுக்கு முக்கியத்துவம்

Road Safety Markings Association (RSMA) அமைப்பு White Lines Save Lives எனும் பாதைக் குறியீடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் போராட்டத்தை ஆரம்பித்து உள்ளது. இவ்வமைப்பு மேற்கொண்ட ஆய்வுகளின் படி பாதைக் குறியீடுகள் குறைந்த அளவு பராமரிப்புடன் விபத்துக்களை பெருமளவு குறைத்து உள்ளதாக தெரிவிக்கிறது. தற்போது அரசாங்கம் பாதைப் புனரமைப்புக்காக £60 மில்லியனை ஒதுக்கி உள்ளது. ஆனால் குறியீடுகளுக்கும் அதன் பராமரிப்புக்கும் சிறிதளவே ஒதுக்கப்படுகிறது.

இந்த விழிப்புணர்வு போராட்டத்தின் மூலம் தெருக்களை பயன்படுத்துபவர்கள் பாதுகாப்பு பற்றிய தங்கள் கருத்துக்களை உள்ளாட்சி மன்றங்களுக்கு தெரியப்படுத்த முடியும். மேலும் வீதி விபத்துக்களை வீதிக் குறியீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைப்பதை தொடர்ந்து உள்ளாட்சி மன்றங்கள் வீதிக் குறியீடுகளுக்கும் அதன் பராமரிப்புக்கும் ஆன வரவுசெலவுத் திட்டத்தை மீளாய்வு செய்து வருகின்றன. இதன் மூலம் வீதிக்குறியீடுகளுக்கும் அதன் பாராமரிப்புக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்படும் சாத்தியம் உண்டு.

இக்கூடுதல் நிதி ஒதுக்கம் அழிந்து வரும் குறியீடுகளை செப்பனிடவும் புதிய குறியீடுகளை அமைத்து வீதிப் பாவனையாளர்களை எச்சரிக்கவும் அவர்களை கவனிக்கத் தூண்டவும் உதவும்.

# கார்களை கழித்து விடும் கட்டணம் உயர்கிறது

# கண்ட இடங்களிலும் கார்கள் கைவிடப்படுகிறது

பாவனைக்கு உதவாத கார்களை கழித்து விடுவதற்கான கட்டணம் £69 ல் இருந்து £100 வரை உயர உள்ளது. கார்களை சுற்றுச் சூழல் மாசடையாமல் அழிப்பது என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் EU End of Life Directive என்ற உடன்படிக்கைக்கு ஏற்பவே இந்தக் கட்டண உயர்வு மே மாத இறுதிப் பகுதியில் இருந்து அமுலுக்கு வருகிறது.

சில பொறுப்பற்ற கார் சொந்தக்காரர்கள் இந்தக் கட்டணத்தில் இருந்து தப்புவதற்காக ஆயுள் முடியும் கார்களை கண்ட கண்ட இடங்களிலும் கைவிட்டு செல்கின்றனர். இதனால் சில உள்ளாட்சி மன்றங்களில் கார்கள் தெருக் குப்பையாக மாறி வருகிறது. இந்தப் பொறுப்பற்ற சொந்தக்காரர்கள் தமது கார்களை முக்கிய சந்திகளிலும் போக்குவரத்து நெரிசலான பகுதிகளிலும் மருத்துவமனை வாயில்களிலும் கூட கைவிட்டு விட்டு செல்கின்றனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன் விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கிறது. இப்படி கை விடப்படும் கார்களை 24 மணி நேரத்தக்கள் அகற்றவும் உரிமையாளர்களை விரைவாக அடையாளம் காணவும் ஹரோ கவுன்சிலுக்கு அதிகாரம் வழங்கப்பட இருக்கிறது.

# சுப்பர் மார்க்கற்றில் கார் விற்பனை ஆரம்பம்

84 கிளைகளை உடைய மொறிசன் சுப்பர் மார்க்ற் Look4cardeals.com உடன் இணைந்து மலிவு விலையில் கார் விற்பனையை ஆரம்பித்து உள்ளது. புதிதாக வடிவமைக்கப்பட்டு வெளிவரும் கார்கள் £3,000 வரை விலை குறைத்து விற்கப்படுகிறது. முதல் இரு கார் விற்பனை ஓல்ட்ஹாம், பிறடபோர்ட் ஆகிய இடங்களில் உள்ள மொறிசன் கிளைகளில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. பின்னர் ஏனைய இடங்களுக்கும் இது விஸ்தரிக்கப்பட உள்ளது.

இக்கார்களை இணையத்தளத்திலும் பார்வையிடக் கூடிய வசதிகள் செய்யப்பட்டு உள்ளது. போட்டி விற்பனை சட்டத்தில் இருந்து இதுவரை விலக்களிக்கப்பட்டு இருந்த கார் விற்பனையை தற்போது ஐரோப்பிய ஒன்றியம் இரத்து செய்ய முடிவெடுத்ததை அடுத்தே சுப்பர் மாக்கற்றுக்கள் கார் விற்பனையில் ஆர்வம் காட்டி வருகின்றன. மொறிசனை தொடர்ந்து ரெஸ்கோ, செயின்ஸ்பறி ஆகியனவும் கார் விற்பனையை ஆரம்பிக்க உள்ளன.

NATRAJ SWEET CENTRE
Curry & Rice available everyday
Natraj
The name behind the quality
Come and visit our Newly Refurbished Sweet Centre
Natraj
Where the quality starts
The Best is Pure Vegetarian Indian Cuisine for Weddings, Parties, Religious Events & Special Occasion
We have a vast selection of delicacies indian sweets & savouries to take away
PURE VEGETARIAN CATERER FOR EXCLUSIVE WEDDINGS & PARTIES RING FOR A MENU
341 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDX. HA2 8JB
TEL: 020 8426 8903 FAX: 020 8248 2255

MAROO CASH & CARRY
205 Kenton Road, Harrow, Middx. HA3 0HD
Tel: 020 8907 3900
ALL IN KITCHEN WARE
BUY ONE GET ONE FREE IN MANY ITEMS
VERY VERY CHEAP PRICES
RETAILERS & WHOLESALERS OF STAINLESS STEEL, PLASTICWARE, THERMOWARE, AGGARBATHI AND MANY MORE ITEMS
WHY DO YOU NEED TO GO EALING ROAD
WHILE WE BEAT ANY PRICES!!!
(OFF STREET PARKING IS FREE!!!)

OPEN TO PUBLIC
WHOLESALE PRICE DIRECT TO PUBLIC
OPENING HOURS MON to SAT 9.00am to 7.00pm
SUN 10.00am to 5.00pm

DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING LTD.
FACTORY PRICES WHY PAY MORE?
MANUFACTURERS & INSTALLERS OF:
ALUMINIUM • HARDWOOD • RESIDENTIAL DOORS
PORCHES • PATIOS • UPVC
All Work Guaranteed For 10 Yrs
All Work Carried Out By Our Own Qualified Craftsmen
Retail & Trade Welcome All Double Glazing Repair Work Undertaken
Tel: 020 8514 0819 Fax: 020 8514 2333
Showroom: 844 Romford Rd, E12

WINDOWS DOORS CONSERVATORIES
FREEPHONE 0800 018 4252
TEL/FAX: 020 8426 8898

Manufacturers and Installers of PVCU & Aluminium Windows, Doors, Storm Porches & Conservatories
Stained & Bevelled Glass Specialists
cladding
URL:www.aacladding.co.uk
E-mail:sales@aacladding.co.uk
AA Cladding, 260 Northolt Road, South Harrow, Middlesex HA2 8DY

## மேஷம்

ஏழரைச் சனியில் 2003 -ஜூன் வரை பாதச்சனி நடக்கிறது. அத்துடன் ஏழரைச் சனியும் முடியும். வாக்கியப் பஞ்சாங்கப்படி 2003 -ஜூன் மாதம்தான் சனி பெயர்ச்சி வருகிறது.

2002 -ஜூலையில் மிதுனத்துக்கு போகும் சனி 2003 -ஜனவரியில் மீண்டும் ரிஷபத்துக்கு வக்கிரமாக திரும்பி வரும். அடுத்து 2003- ஏப்ரலில்தான் சனி மிதுனத்துக்கு பெயர்ச்சியாகும். இது திருக்கணித கணக்கு.

வாக்கியப் பஞ்சாங்கப்படி மிதுனத்துக்கு போகாமலேயே, ரிஷபத்திலேயே செல்லும் சனி, அந்த ராசியிலேயே வக்கிரமாகி, பிறகு வக்கிரம் நிவர்த்தியாகி 2003 -ஜூனில்தான் மிதுனத்துக்குப் போகும். எனவே 2 மாத வித்தியாசம் தான் சனி பெயர்ச்சிக்கு ஏற்படும். திருக்கணிதப் பிரகாரம், மிதுன ராசிக்கு சனி மாறினாலும், ரிஷப ராசிக்குரிய பலனையே தருவார். ஆகவே மேஷ ராசிக்காரர்களுக்கு 2003 -வரை ஏழரைச்சனி நீடிப்பது தெளிவான உண்மை.

இ[illegible] ஏழரைச் சனி முதல் சுற்று ந[illegible]ப்பவர்களுக்கும், 2-ம் சுற்று நடப்பவர்களுக்கும், 3-ம் சுற்று நடப்பவர்களுக்கும் ஒரே மாதிரியான கஷ்டத்தைத்தான் கொடுத்து வருகிறது. யோகத்தைக் கொடுக்கவில்லை.

தப்பித்தவறி காசு, பணம் யோகத்தை கொடுத்திருந்தாலும், வேறு வகையில் இழப்புகளை சந்திக்க வைத்திருக்கும். ராகு சனியுடன் வந்து சேர்ந்தது முதல், சனியின் கடுமை ஆதிக்கம் குறைந்திருக்கிறது என்று நம்பலாம்.

குரு பெயர்ச்சிக்குப் பிறகு, மேஷ ராசிக்காரர்களுக்கு, ஏழரைச் சனி எந்தச் சுற்றாக இருந்தாலும், சனி போகிற போக்கில் அனுதாபப்பட்டு சில நன்மைகளை செய்து விட்டுப் போவார்.

## ரிஷபம்

ரிஷபராசிக்கு 2003 -ஜூன் வரை, வாக்கியப் பஞ்சாங்கப் படி ஜென்மச் ச[illegible] நடக்கிறது. திருக் கணிதப்படி 2002 -ஜூலையில் மிதுனத்துக்குப் போகும் சனி, டிசம்பரில் வக்கிரமடைந்து, 2003 -ஜனவரியில் மீண்டும் ரிஷபத்திற்கு திரும்புவார். திரும்பவும், 2003 -ஏப்ரலில்தான் மிதுனராசிக்கு பெயர்ச்சி ஆவார். 2002-ஜூலையில் மிதுனத்துக்கு சனி மாறினாலும், ரிஷப ராசியின் பலனையே, அதாவது ஜென்மச் சனியின் பலனையே செய்வார்.

ஏழரைச் சனி தொழிலைக் கெடுத்தது, பதவியைக்கெடுத்தது. பொன், பொருள், புகழைக்கெடுத்தது. வழக்குகளை சந்திக்க வைத்தது. இவற்றிலிருந்து விடுதலையும், விமோச்சனமும், கிடைக்குமா? கடன் நிவர்த்தி ஆகுமா? மீண்டும் தொழில் அமையுமா? இழந்த பதவியைப் பெறமுடியுமா? வழக்குகளில் வெற்றி கிடைக்குமா? என்பதுதான் முக்கியம். 2002-ஜூலையில் குரு பெயர்ச்சியாகிறது. காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதையாக, திருக்கணிதப்படி சனிபெயர்ச்சியும் ஆகப்போவதால், ஜூலையில் மிகப் பெரிய திருப்பங்கள் வாழ்க்கையில் நடைபெறப்போகிறது. அதிலிருந்து விடிவும், விமோச்சனமும் கிடைக்கப் போகிறது.

சித்திரை கடைசிதேதியும், வைகாசி முதல் தேதியும், ரிஷப ராசியில் 6 கிரகச் சேர்க்கைகள் கூடுவதால், ரிஷபராசிக்காரர்களுக்கெல்லாம் எதிர்பாராத யோகம் ஏற்படும். அந்தக் கனவின் ஆனந்தத்திலேயே இந்த மாதப் பொழுதை ஓட்டிவிடுங்கள்.




## மிதுனம்

வாக்கியப் பஞ்சாங்கப்படி 2003 ஜூன் வரை, ஏழரைச் சனியில் விரயச் சனி நடக்கிறது. திருக்கணிதப்படி 2003 -ஏப்ரலில் மிதுனத்துக்கு சனி பெயர்ச்சி ஏற்படும். சனி வக்கிரமடைந்து 2003 ஜனவரியில் ரிஷபத்துக்கு திரும்புவார். பிறகு 2003 -ஏப்ரலில்தான் மீண்டும் மிதுனத்துக்கு பெயர்ச்சி ஆவார். மிதுனத்தில் இருக்கும் இடைக்காலத்தில் சனி ரிஷபராசியின் பலனையே தருவார். ஆக மொத்தத்தில் 2003 -ஜூன் வரை உங்களுக்கு விரயச் செலவுகள் இருக்கிறது என்று அர்த்தம். இந்த வைகாசி முதல் அந்த விரயம் சுபவிரயமாக, நல்விரயமாக மாறலாம்.

## கடகம்

12-ராசிகளிலும் கடகம், சிம்மம், கன்னி ஆகிய மூன்று ராசிக்கும் முக்கியத்துவம் உண்டு.

இந்த 3 ராசிக்காரர்களும், இன்பத்தின் விளிம்பிலே நின்று இன்னிசைப்பார்கள். இமைக்கும் நேரத்தில் கஷ்டங்கள் மாறி, இஷ்டம் போல எல்லாம், இனிது நிறைவேறிவிடும்.

மன்னன் கௌசிகன் ராஜ ரிஷி விசுவாமித்திரர் ஆகி வசிஷ்டர் வாயால், பிரம்ம ரிஷி பட்டம் பெற்றார். அந்த நிலைக்கு அவன் உயர்ந்ததற்கு காரணம்? வைராக்கியம், சாதனை, துணிவு இந்த மூன்றும்தான். இதற்குமேல் தியாகம். அந்த வழிமுறைகளை நீங்களும் பின்பற்றி, செயல்பட்டால், உங்களுக்கு என்று ஒரு யோகம் காத்திருக்கும்.

மாம்பழம் கிடைக்காத வருத்தத்தில் துறவு கொண்ட திருக்குமரன் தண்டாயுதபாணி, எனக்கென்று ஒரு உலகம். எனக்கென்று ஒரு மக்கள். எனக்கென்று ஒரு கொடி, எனக்கென்று ஒரு நாடு என்று வகுத்துக்கொண்டதுபோல, நீங்களும் சாதனை படைத்து, உங்கள் எல்லைக்கே எல்லோரையும் வரவழைக்கலாம்.

## சிம்மம்

ராசிநாதன் சூரியன் மாத முற்பகுதி வரைமேஷத்தில் உச்சமாகவும், பிற்பகுதியில் ராசிக்கு 10-லும் பலம் பெறுவார். எனவே, உங்களுடைய செல்வாக்கும், சொல்வாக்கும், பக்கத்துணையாக இருந்து பாதுகாக்கும். வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும்.

6-க்குடைய சனி 10-லிருப்பதால் இடை, இடையே தளர்ச்சிகளும், தடைகளும், போட்டிகளும் உருவானாலும், இறை நம்பிக்கையோடு, குருவருளாலும், திருவருளாலும், அவைகளைக் கடந்து வெற்றி வாகை சூடுவீர்கள்.

கிரகங்கள் சோதனை செய்தாலும் காலம் கைவிடாது. எனவே விதிவசமாக சோதனைக்கு உட்பட்டவர்கள் சைவ சித்தாந்த நெறிப்படி நடந்தால் கஷ்டங்களைக் கடந்துவிடலாம்.

## கன்னி

கடகம், சிம்மம் , கன்னி ராசிகளின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் பற்றி முன் இரண்டு ராசிகளிலும் விளக்கி இருந்தேன். கஷ்டங்கள் வந்தாலும், சோதனைகள் வந்தாலும் ஈசங்கு சுட்டாலும் வெண்மை தரும்ா என்பது போல நீங்கள் புடம் போட்ட தங்கம் மாதிரி ஜொலிப்பீர்கள்.

1998- முதல் அட்டமத்துச் சனி வந்ததிலிருந்து வேதனைகளும், சோதனைகளும் ஒரு புறம் இருந்தாலும், உங்களுடைய சாதனைகளாலும்,. விடாமுயற்சிகளினாலும் தாக்குப்பிடித்து சமாளித்து நிற்கிறீர்கள்.

வைகாசி மாதம் சூரியன் 9-ல் வரும்போது உங்கள் தொழில் மேன்மையடையும். பொருளாதாரம் சீர்படும். கொடுக்கல் வாங்கல் வரவு செலவு திருப்தியாக இருக்கும்.

## துலாம்

துலாராசிக்கு 2003 வரை அட்டமத்துச்சனி நடக்கிறது. 2002 ஜூலையில் சனி மிதுனராசிக்குப் பெயர்ச்சியாகும்போது, துலாராசிக்கு அட்டமத்துசனி விலகும் என்பது நம்பிக்கை. மிதுனராசிக்கு போகும் சனி. மிதுனத்தில் வக்கிரம் அடைந்து 2003-ஜனவரியில் மீண்டும் ரிஷபத்தில் வந்து 2003 ஏப்ரலில்தான் ரிஷபத்தை விட்டு வெளியேறுவார். சனி அதிசாரமாகப் போனாலும் ரிஷப ராசியின் பலனையே தருவார். துலாராசிக்கு அட்டமத்து சனியின் பலனாகவே நடக்கும். எனவே, 2003 வரை கடன் ஆதிக்கமும், போட்டி, பொறாமைகளும், தொழில் குழப்பங்களும், மந்த நிலையும், காணப்பட்டாலும், குரு பெயர்ச்சிக்குப் பிறகு, சனியின் கடுமை குறையும். சிலருக்கு ஊர் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்படலாம். அதுவே பரிகாரம் செய்தது போல ஆகிவிடும்.

பொதுவாக அட்டமத்துச்சனி தொட்டது துலங்காது என்றாலும், ரிஷபராசிக்கும், துலாராசிக்கும் சனியோகாதிபதி என்பதால், ஆரம்பத்தில் கெடுதலாகத் தெரிந்தாலும் முடிவில் நன்மையாக அமையும். மாதப்பிற்பகுதியில், பாதகாதிபதியான சூரியன் 8-ல் மறைவதால், கெடுதல்களும், பாதகங்களும், விரயங்களும், அலைச்சல்களும் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

அகப்பட்டவனுக்கு அட்டமத்துச்சனி, ஓடிப்போனவனுக்கு 9-மிடத்து குரு என்பது பழமொழி. நடப்புகாலத்தில் உங்களுக்கு அட்டமத்துசனியுமிருக்கிறது. 9-மிடத்து குருவும் இருக்கிறது. குரு ராசியைப் பார்ப்பதால் குரு பார்க்க கோடிக் குற்றம் விலகும் என்ற விதிப்படி, உங்களுக்கு எந்த சங்கடங்களும் வராது.

## தனுசு

ராசிநாதன் குரு ராசிக்கு 7-ல் மாதம் முழுவதும் நின்று ராசியைப் பார்க்கிறார். அதனால் உங்களுடைய செயல், ஆற்றல், திறமை இவைகளுக்கு எந்தக்கேடு கெடுதியும் வராது. என்றாலும் ராசிக்கு 6-ல் எல்லா முக்கிய கிரகங்களும் மறைவது ஒரு பலக்குறைவுதான். பொருளாதாரம் - மாதம் முதற்பகுதிவரை உங்களுடைய தொழில் - வாழ்க்கை எல்லாவற்றிலும் போராட்டமும், எதிர்நீச்சலும், இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் அவைகளைச் சமாளித்துவிடலாம்.

(5-ல்) இருதயஸ்தானத்தில், 17-ம் தேதி புதன் வக்ரமாக வருவதால் காரண காரியம் இல்லாமல், வருத்தங்களும், பூசல்களும், ஏற்படலாம். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்ற அடிப்படையில் - பெருந்தன்மையைப் பின்பற்றினால், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம்.

## மகரம்

ராசிநாதன் சனி மாதம் முழுவதும் ராசிக்கு 5-ல் நிற்கிறார். மாதநடுவில் சித்திரை கடைசித் தேதியும், வைகாசி முதல் தேதியும், 5-ல் 6 கிரகசேர்க்கை ஏற்படும்.

இது உங்களுக்கு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும். ராகு கேதுவுக்குள் கிரகங்கள் அடங்குவதால் கால சர்ப்ப தோஷம் எனப்படும்.

காலசர்ப்ப யோகம் என்று ஒன்று உண்டு. காலசர்ப்ப தோஷம் என்றும் ஒன்று உண்டு. தீபத்தை வைத்துக்கொண்டு இருளைப் போக்கி, ஒளியும் உண்டாக்கலாம். தீபத்தை வைத்து, இன்னொரு இடத்துக்கு தீயும் வைக்கலாம். ஆக்கமும் செய்யலாம் அழிவையும் உண்டாக்கலாம். ஆக்குவது கால சர்ப்ப யோகம்; அழிப்பது கால சர்ப்ப தோஷம்!

அதாவது அன்பு என்பது இருவகை! பேரன்பு -சிற்றன்பு என்று இரண்டு! தன் இரத்த பந்த சொந்தம் பாராட்டி, அவர்களுக்காக கடன் பட்டு, கஷ்டத்தைச் சுமப்பது சிற்றன்பு - காலசர்ப்ப தோஷம்! சுயநலத்தை விரட்டியடித்து பொதுநலத்துக்காக தியாகத் தழும்புகளை ஏற்பது பேரன்பு - காலசர்ப்ப யோகம்!

6-8-12-க்குடையவர்களின் சம்பந்தம் இருக்கும்போது, கால சர்ப்பதோஷம். 5-9-க்கு அதிபதிகளோடு கூடி, லக்னாதிபதி, அல்லது ராசியாதிபதியோடு, சம்பந்தப்படும்போது, காலசர்ப்ப தோஷம்! கொடிய விஷயத்தைத் தாங்கியிருக்கும் நாகப்பாம்பிடம்தான் - விலைமதிப்பற்ற நாகரத்தினமும் இருக்கிறது. விஷம் - தோஷம்! ரத்தினம் -யோகம்!

## கும்பம்

9-ல் குரு நின்று ராசியைப் பார்ப்பது யோகம்! குரு பார்க்க கோடி தோஷம் விலகும் என்பார்கள். எனவே உங்களுக்கு குருவருளும், திருவருளும், நிறைய இருக்கிறது. ஆனால் பொருள் அருள் இருக்கிறதா என்பது சந்தேகம்தான்! அதாவது சரசுவதி கடாட்சம் பரிபூரணமாக இருக்கிறது.

சில கும்பராசி நேயர்களுக்கு லட்சுமி கடாட்சம் நிறைய உண்டு.

அது ஏன்? 10-ல் கேது 4-ல் ராகு - செவ்வாய் - சனி சேர்க்கை!

எல்லோருக்கும் எல்லா நிறைவும் ஏற்பட்டுவிடாது. அதுதான் விதி! காலத்தின் கட்டளை, அதனால்தான் பெரியவர்கள் விரும்பிப் போனால் விலகிப்போகும்; விலகிப் போனால், விரும்பி வரும் என்றார்கள்.

இருந்து கொடுத்துவிட்டு, நடந்து அலைந்து வாங்குவதா என்பார்கள். நீங்கள், எல்லோருக்கும் வாரி இறைத்துவிட்டு, இன்று வசூல்பண்ண முடியாமல் மலைக்கிறீர்கள் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்க முடியாமல் விழிக்கிறீர்கள்.

## மீனம்

ராசிநாதன் குரு மாதம் முழுவதும் ராசிக்கு 4-ல் நின்று, 10-ம் இடத்தைப் பார்ப்பதால், உங்கள் வாழ்க்கை, தொழில், இவைகளுக்கு எந்த பாதிப்புக்கும் இடமில்லை. அதே சமயம் குரு விரயஸ்தானத்தையும் பார்ப்பதால், செலவு, செலவு. கட்டுப்படுத்த முடியாதபடி செலவு வருகிறது.

8-ம் இடத்தையும், குரு பார்ப்பதால், ஏதோ ஒரு வகையில் உங்களுடைய நிம்மதி கெடுகிறது. சஞ்சலம், கவலை, அல்லது உடல் நலக்குறைவுக்கு இடமேற்படுகிறது.

8-ம் இடம் என்பது 9-ம் இடத்துக்கு 12-ம் இடம் என்பதால் தகப்பனார் அல்லது பூர்வீகச் சொத்து இவைகளுக்கு, ஏதோ ஒருவகையில், பாதிப்பும் இருக்கிறது.

குடும்பத்தில் குழப்பங்களும் பிரச்சினைகளும் ஏற்படும்.

குரு, கடகத்தில் உச்சம் பெற்று 9-ம் இடத்தைப் பார்க்கும் போது, இந்தப் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

# ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் கலாட்டா

## £100,000க்கு கணக்கு வழக்கில்லை - பணம் எங்கே?


## ஆலய நிவாகத்தினுள் மோதல்...

## கோவில் பணம் கொள்ளை?


மே மாதம் 10ம் திகதி ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் கூட்டப்பட்ட கூட்டம் ஆரம்பமாகிய சில நிமிடங்களிலேயே குழப்பத்துக்கு உள்ளாகி கலவரமானது. ஆலய நிர்வாகதவர்களுக்குள் நீண்டகாலமாக இருந்த பகமை மே மாதம் 10ம் திகதி இரவு 10 மணியளவில் வெடித்தது. நிர்வாகத்தின் செயலாளர் இ ஜெயதேவன், தனாதிகாரி பி சௌந்தரராஜன் இருவரையும் ஆலயத்தின் கணக்கு வழக்குகளை காட்டும் படி தலைவர் மு சிவராஜா கேட்டு உள்ளார். ஆனால் மூன்று தடவைகள் எழுத்த மூலம் கேட்ட போதும் சவுந்தரராஜனோ, ஜெயதேவனோ கணக்குகளை சமர்ப்பிக்கவில்லை. மு சிவராஜா The Charity Commission க்கு 9 மே 2002 ல் எழுதிய முறைப்பாட்டில் ஆர் ஜெயதேவனும் பி சௌந்தரராஜனும் உறவினர்கள் என்றும் ஆலயத்தில் இருந்து வருமானம் வர ஆரம்பித்ததும் அவர்கள் நிதியை தங்கள் கைகளுக்கு உள்ளேயே வைத்து இருந்ததாக குறிப்பிட்டு இருந்தார். மேலும் ஆலயத்துக்கு சொந்தமான £100,000 வரையான பணத்துக்கு தற்போது கணக்கு வழக்கு காட்டப்படாமல் உள்ளது என தலைவர் சிவராஜா உதயனுக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்து உள்ளார்.

ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கணக்கு வழக்குகள் நீண்ட காலமாக சமர்ப்பிக்கப்படாததை அடுத்து புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யும் நோக்குடன் தலைவர் சிவராஜா பொதுக் கூட்டம் ஒன்றை மே 10ம் திகதி ஒழுங்கு செய்து துண்டுப்பிரசுரம் ஒன்றைம் மே மாதம் 4ம் திகதி கையெழுத்து இட்டு வெளியிட்டு இருந்தார். அத்துண்டுப் பிரசுரத்தில் ஆலயத்தின் உண்டியல் பணம் ஆலயத்தில் வைத்தே எண்ணப்பட வேண்டும் என்றும் ஆலய வருமானத்தின் பெரும்பகுதி இலங்கையில் அல்லலுறும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சிவராஜா கேட்டு இருந்தார்.

சிவராஜாவினால் அழைக்கப்பட்ட கூட்டத்தை அனுமதிக்கப் போவது இல்லை என்று இ ஜெயதேவன் எதிர் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். அதில் சிவராஜா பதவியை இழந்து விட்டதாகவும் ஆலயப் பணத்தை இலங்கையில் உள்ள சட்டத்தரணிகளான தனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வழங்கியதாகவும் ஜெயதேவன் குற்றம் சாட்டி இருந்தார். மேலும் மே மாதம் 26ம் திகதி யாப்பின் பிரகாரம் வருடாந்த ஆலயப் பொதுக் கூட்டம் நடைபெற இருப்பதாகவும் அதில் ஆலய பரிபாலனம் சம்பந்தமாக முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளதாகவும் அத்துண்டுப் பிரசுரம் தெரிவிக்கிறது.



ஈழபதீஸ்வர ஆலயத்தின் செயலாளர் தி.ஜயதேவனிடம் கணக்குகள் கேட்கும் ஆலயத் தலைவர் திரு. சிவராசா (முகத்தை மறைத்துகொண்டிருப்பவர் ஜயதேவன்)



அர்ச்சகர் குகன் தனது பூநூலை அறுத்தெரிய முற்பட்டபோது எடுத்த படம்

## சிவலிங்கத்தை தும்புகட்டையால் அடித்த அர்ச்சகரின் அராஜக செயல்

## தனது பூநூலை அறுத்தெரியவும் முற்பட்டார்

ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் மே 10ம் திகதி குழப்பத்தை ஆரம்பித்து வைத்த அர்ச்சகர் குகன் சிவலிங்கப் பெருமானின் சிலையை துடைப்பத்தால் அடித்தார். நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் முன்னிலையில் அர்ச்சகர் குகன் சிவலிங்கத்தை துடைப்பத்தால் அடித்தது வழிபாட்டுக்கு வந்திருந்த பக்தர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அர்ச்சகரின் இச்செயலால் அதிர்ச்சி அடைந்த பக்தைகள் ஆத்திரமடைந்து அர்ச்சகரை தாக்க முயன்றனர். இருந்தபோதிலும் அதனை பொருட்படுத்தாது அர்ச்சகர் குகன் ஒரு சன்டியனைப்போல் ஆவேசத்துடன் தனது பூநூலையும் அறுத்து எறியவும் முற்பட்டார். அருகில் நின்றவர்கள் தடுத்து நிறுத்தினர்.

வழமையாக இரவு 9 மணிக்கு நிறைவடைய வேண்டிய பூசையை இரவு 9:45 வரை இழுத்துச் சென்ற அர்ச்சகர் குகன் கூட்டம் நன்றாக நடக்காது என ஏற்கனவே தெரிவித்து உள்ளார். அர்ச்சகர் குகனும் செயலாளரான இ ஜெயதேவனும் தனாதிகாரி சௌந்தரராஜனும் அக்கூட்டத்தை நடைபெறாமல் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு இருந்தனர் என்று உதயனுக்கு வந்த நேரடி செய்திகள் தெரிவிக்கின்றன. அர்ச்சகரின் செயலைப் பொறுக்காமல் பலர் அர்ச்சகர் குகனை நிர்வாக விடயங்களில் தலையிட அருகதையில்லை, நீர் தலையிட வேண்டாம் என்று சத்தமிட்டனர். அதனை அடுத்து அர்ச்சகர் குகனுக்கும் வந்திருந்த கூட்டத்தினருக்கும் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டுது. எதிர்பவர் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவர்களுக்கு சாத்த நினைத்த அடியை சாமிக்கே சாத்தினார். இந்த காட்சியை எமது நிருபர்கள் நேரில் கண்டனர் என்பது குறிப்படதக்கது.

தொழில் ரீதியில் இலங்கையிலிருந்து இலண்டனுக்கு வந்த அர்ச்சகர் குகனின் விசா முடிவடையப் போவதாகவும் அதனை ஜயதேவன் புதுபித்து கொடுக்க உள்ளதாகவும், அப்படி விசாவை புதுபித்துக்கொடுக்க அர்ச்சகர் குகனை ஜயதேவன் ஏவியதாக பின்னர் வந்த செய்திகள் உதயனக்கு தெரிவிக்கின்றது. மேலும் 'அர்ச்சகர் குகன் இலங்கையிலுள்ள நெடுந்தீவு மேற்கு 'கரமத்து கந்தசாமி கோவிலில்' சுமார் 15 வாருடங்களுக்குமுன் வேலை பார்த்ததாகவும், தான் வேலை பார்த்த அதே கோவிலின் உண்டியலை உடைத்து பணத்தை கொள்ளையடிக்கும் பொழுது மக்களிடம் பிடிபட்டு அடி உதை வாங்கியதாகவும் தெரியவந்துள்ளது. ஊரில் அச்சம்பவத்தை நேரில் கண்டவர் இது ஒன்றும் இவனுக்கு புதியதல்ல. இவன் எப்பொழுதும் சண்டித்தனம் செய்பவன். இது பழகிப்போன விடயம் அவனுக்கு ச் சே..இவனையெல்லாம் கோவிலில் வைத்து பூசை செய்தால் எங்கிருந்து எங்கட பிரார்த்தனைக்கு பதில் கிடைக்கும். இதுபோன்ற கீழ்த்தரமானவர்களை கோவிலில் வைக்க எப்படிதான் இவர்களுக்கு மனம் வருகின்றதோ' என்று உதயனுக்கு நேரில் தெரிவித்தார்.

# வியாபார சந்தைபோல் ஆனது ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கலாட்டா

## ஆலயத்தினுள் பூட்ஸ்

## காலணிகளுடன் பொலிஸார் நுழைந்தனர்

மே 10ம் திகதி ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் நடந்த கூட்டத்தில் கூச்சலும் குழப்பங்களும் நிறைந்து காணப்பட்டதையடுத்து பயங்கரமான அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்துவிடும் என்று எண்ணிய பொலிஸார் கூட்டத்தை கலைத்து வெளியேற்ற பூட்ஸ் காலனிகளுடன் ஆலத்தினுக் நுழைந்து மக்களை வெளியேற்றினர். பொலிஸ்ரின் கட்டுக்கு மீறியும் மக்கள் கலைந்து செல்லாமல் கூச்சலிட்டுக்கொண்டே இருந்தபடியால் மேலும் 50க்கும் மேற்பட்ட பொலிஸார் வேகமாக வந்து இறங்கி இவர்களுக்கும் மேலாக சத்தம் போட்டு வெளியேற்றினர். இந்த ஆலயம் வன்முறை அதிகமான வெம்லி பகுதியில் அமைந்திருப்பதால் கொலைகள் நிகழ்ந்துவிடலாம் என அஞ்சி வெளியேற்றினர். அங்கு கூடியிருந்த மக்கள் ஜயதேவனை வெளியேற்றும்படி கோஷம் போட்டனர். இருப்பினும் பொலிஸார் அவர்களை கலைத்து வெளியேற்றினர். குறிப்பிடும்படியான சிலர் எமது நிருபர்கள் அக்கலவரத்தை படமெடுக்க முற்பட்டபோது புகைபடம் எடுக்க விடாமல் தடுத்துள்ளனர். அப்படி இருந்தும் உதயனின் புகைப்பட பிடிப்பாளர்கள் குழு கலவரவ சம்பவத்தை படம்பிடித்துவிட்டனர். ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தை சேர்ந்த நிர்வாகி ஒருவர் எமது நிருபர் ஒருவரிடம் இச்சம்பவத்தை மக்களுக்கு தெரியபடுத்தவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். பகிரங்கமாக நடைபெற்ற இக்கலவரத்தை உதயன் பிரசுரிக்காமல் இருப்பது சரியல்ல நீங்கள் நடந்ததை அப்படியே ஒன்று விடாமல் பிரசுரப்படுத்துங்கள். இதனை வெளிக் கொண்டுவந்தால் இன்னும் பல ஆலயங்களுக்குள் நடந்துகொண்டிருக்கும் நிர்வாகங்களுக்குள் ஒருவரை ஒருவர் செருப்பால் அடித்துக்கொள்ளும் விஷயங்களும் பூசல்களும் மக்களுக்கு தெரியவர வேண்டும். அப்படி தெரியவந்தால்தான் இதற்கெல்லாம் ஒரு விடிவு கிடைக்கும் என்று மற்றொருவர் எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். இக்கலவர சம்பவத்தின்போது உதயனின் நிருபர்கள் 7 பேர்வரை நேரடியாக செய்தி சேகரித்தது குறிப்பிடதக்கது.


எப்ப்போய்அம்மிமொய்பாயாஜலமாபக்திவேஷமாஅப்ப்போ சொல்லுரோன்டோய்...



(மேலே) கூட்டத்தை பொலிஸார் கலைத்தபோது எடுத்த படம்




(மேலே) கூட்டத்தைவிட்டு வெளியேறும் ஜெயதேவன், சௌந்தர்ராஜன் உறவினர் தனது காரினுள்



### உதயனின் சிறப்புப் பேட்டி

## ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத் தலைவர்

# மு சிவராஜாவுடன் நேர்காணல்



ஈழபதீஸ்வரர் ஆலய தலைவர் மு சிவராசாவுடன் உதயன் நிருபர் தி ஜெயபாலன் நேர்முகம்

மே மாதம் 13ம் திகதி ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் தலைவர் மு சிவராஜாவிடம் உதயன் கண்ட சிறப்பு பேட்டி வாசகர்களுக்கு தொகுத்து வழங்கப்படுகிறது. மே மாதம் 10ம் திகதி நடைபெற்ற ஆலயப் பொதுக் கூட்டத்தில் இவருக்கு ஆதரவாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் திரண்டு வந்து புதிய நிர்வாகத்தை ஏற்படுத்தும் படி கேட்டுக் கொண்டு உள்ளனர். இந்நிலையில் இவரது நேர்முகம் உதயன் வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதி அதனை இங்கு தொகுத்து தருகிறோம்.

நிருபர் : ஜெயதேவன் நீங்கள் தலைவர் பதவியில் இருந்து விலக்கப்பட்டு விட்டீர்கள் என்று தெரிவித்திருக்கிறாரே, இப்போதும் நீங்கள் அப்பதவியில் இருக்கிறீர்களா?

சிவராஜா : அது ஜெயதேவனுடைய அடாவடித்தனமான கடிதம். ஜெயதேவனுடைய திட்டம் அந்த நிர்வாகத்தில் இருந்து என்னை தூக்கிவிட்டு கோயிலை தான் நடத்த வேண்டும் என்று அவருக்கு ஆசை வந்துவிட்டது. என்னைத் தூக்கிவிட்டு தனது மச்சான் முறையான நிதிக்கு பொறுப்பாக இருக்கும் சௌந்தரராஜனுடன் சேர்ந்து கோவிலை குடும்பச் சொத்தாக்க ஜெயதேவன் முயற்சிக்கிறார். கெ விவேகானந்தன் தற்போது இவற்றில் இருந்து ஒதுங்கி விட்டார். நான் மட்டும் தான் தற்போது ஜெயதேவனுக்கு கரைச்சலாக உள்ளேன். அதனால் தான் என்னை பதவியில் இருந்து விலத்தியதாக பிரசுரம் விட்டு உள்ளார்.

நிருபர் : ஈழபதீஸ்வரர் ஆலயம் எப்போது? யாரால்? எந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டது ?

சிவராஜா : 1999 ம் ஆண்டு நடுப்பகுதியில் நானும் நிர்வாகத்தில் உள்ள மற்றவர்களான இ ஜெயதேவன், பி சௌந்தரராஜன், விவேகானந்தன் இவர்களுடன் இன்னும் நான்கு பேரும் இணைந்து ஆரம்பித்தோம். வெம்பிளி பகுதியில் ஒரு சிவன் ஆலயம் வேண்டும் எனபதற்காகவும் அப்பகுதியில் வாழும் அகதி இளைஞர்களுக்கு உதவவும் ஆலய வருமானத்தில் ஒரு பகுதியை இலங்கையில் கஷ்டப்படும் மக்களுக்கு உதவும் நோக்கத்துடனும் ஆரம்பித்தோம்.

நிருபர் : கடந்த 3 ஆண்டுகளுக்குள் நீங்கள் மேற் குறிப்பிட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா?

சிவராஜா : முதல் வருஷம் நாங்கள் கொஞ்சம் செய்தனாங்கள். அடுத்த வருடத்தில் இருந்து அது முழுமையாக தடைப்பட்டு விட்டது.

நிருபர் : 2000ம் ஆண்டின் பின், ஆலய வருமானத்தில் ஒரு பகுதியை இலங்கையில் கஷ்டப்படும் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. அப்படி ஆனால் எதற்காக இவ்வளவு காலம் - 2 ஆண்டுகள் - தாழ்த்தி அதைப் பற்றிய பிரச்சனை இப்போது எழுந்து உள்ளது?

சிவராஜா : என்னை ஆரம்பத்தில் இருந்தே மக்கள் கணக்கை காட்டும் படி கேட்டார்கள். நான் பல தடவை செயலாளர் ஜெகதேவனையும் தனாதிகாரி சௌந்தரராஜாவையும் கணக்கு காட்டும் படி கேட்டேன். அவர்கள் நேரமில்லை நேரமில்லை என்று கடத்தி விட்டார்கள். இப்போது கடைசி 6 மாதகாலமாகத் தான் அடியார்களிடம் இருந்து முறைப்பாடுகள் அதிகமானதால் அதனை முக்கியமாக கவனிக்கிறோம்.

நிருபர் : நீங்கள் ஆலய நிதியை முஸ்லீம்களுக்கு வழங்கியதாக ஜெயதேவன் குற்றம் சாட்டி உள்ளது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

சிவராஜா : கஷ்டத்திற்கு உள்ளான மக்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவுவது தான் நோக்கம். அவர்கள் இந்துவா முஸ்லிமா என்பது முக்கியமானதல்ல.

நிருபர்: ஈழபதீஸ்வரர் ஆலயம் தர்ம ஸ்தாபனமாக பதிவு செய்யப்பட்டு உள்ளதா ?

சிவராஜா : பதிவு செய்ய முயற்சிக்கப்பட்டது. ஆனால் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆனால் ஜெயதேவன் ஆலயத்தை தர்ம ஸ்தாபனமாக பதிவு செய்ய விரும்பாமல் அந்த பதிவு செய்யும் நடைமுறையை குழப்பி உள்ளார் என இப்போது நான் நினைக்கிறேன்.

நிருபர் : தேசிய இந்து ஆலயங்களின் கூட்டமைப்பில் ஈழபதீஸ்வரர் ஆலயமும் இணைந்து உள்ளதா? அப்படி இணைந்து இருந்தால் அவர்கள் இப்பிரச்சினையை தீர்ப்பதில் உதவவில்லையா?

(இது விடயம் பற்றி திரு சிவராஜா தெளிவில்லாமலேயே காணப்பட்டார். அவர் அதில் இணைந்துள்ள மற்றய ஆலயங்கள்

தொடர்ச்சி அடுத்த பக்கம்

# பேட்டி தொடர்ச்சி....

பற்றியும் அறியாமலேயே இருந்தார். )

சிவராஜா : சேர்ந்து இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். ஆனால் அவர்களுக்கு இப்போது தான் இங்கு நடக்கும் பிரச்சினைகள் பற்றித் தெரியும்.

நிருபர் : இந்த கூட்டமைப்பு எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

சிவராஜா : எனக்குத் தெரியாது.

நிருபர் : இந்த ஆலயத்தில் நடந்த பல விடயங்கள் உங்களுக்கு தெரியாமல் நடந்து உள்ளது?

(இந்த கேள்வி சிவராஜாவுக்கு எரிச்சலூட்டுவதாக அமைந்து விட்டது. அவரது முக அசைவுகள் அவரது எரிச்சலை வெளிப்படுத்திய வண்ணம் )

சிவராஜா : கூட்டமைப்பு என்பது எங்கடை கூட்டமைப்பு இல்லையே. (அதை தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற பாணியில் அவர் பதிலளித்தார்.)

நிருபர் : மே 26ம் திகதி ஜெயதேவன் வருடாந்த ஆலய பொதுக் கூட்டம் யாப்பின் பிரகாரம் கூட்டப்படும் என்று தெரிவித்து இருக்கிறாரே, அதற்கு நீங்கள் என்ன செய்வதாக உத்தேசித்து உள்ளீரகள் ?

சிவராஜா : ஜெயதேவன் அப்படி செய்வதற்கு அவருக்கு தகுதி இல்லை. அவர் சட்டப்படி அப்படிச் செய்ய முடியாது. நாங்கள் அதற்கு சட்ட நடவடிக்கை எடுப்போம். கூட்டம் மக்கள் முன்னிலையில் தான் நடத்தப்பட வேண்டும். இதனை தனிப்பட்ட முறையில் முன்னர் தனது வீட்டில் தான் வைத்து நடத்தினவர். அடியார்கள் கூட்டத்தைப் பற்றி கேட்டதற்கு அது உறுப்பினர்களுக்கான தனிப்பட்ட கூட்டம் என்று கூறினார். ஆனால் ஈழபதீஸடவரர் ஆலயத்தில் சந்தா செலுத்தி உறுப்பினராக யாரும் இல்லை. இந்த உறுப்பினர்களுக்கான கூட்டம் என்பதெல்லாம் ஜெயதேவனின் அடாவடித்தனம். ஆனால் ஆலயத்தில் ஆடியார்களையும் அழைத்து கூட்டத்தை நடத்தினால் அதனை நாங்கள் வரவேற்போம்.

நிருபர் : ஜெயதேவனும் சவுந்தரராஜனும் ஆலயக் கணக்குகளை காட்டாததால் தான் ஆலயப் பிரச்சனை இவ்வளவு தூரம் வளர்ந்து உள்ளதாக இருந்தால் அவர்கள் பணத்தை கையாடல் செய்து உள்ளார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?

சிவராஜா : அவர்களை பல தடவை கணக்குகளை காட்டும் படி கேட்டு இருந்தும் ஆண்டுகளாக அவர்கள் அந்தக் கணக்கை காட்டவில்லை. ஆனால் இன்டிபென்டன் ஓடிடிட்டேர்ஸை வைத்து அந்த கணக்குகளைப் பார்த்து சட்டப்படி முடிவெடுக்கும் வரை நான் எதையும் சொல்லமாட்டேன்.

நிருபர் : இப்போது ஆலயத்துக்கு சொந்தமான பணம் எவ்வளவு? எங்கே? யாரிடம்? உள்ளது?

சிவராஜா : கண தொகையில்லை. இலேசாக ஒரு £100,000 வரை வங்கியில் இருக்குது. அது எல்லோருக்கம் தெரியும். எனக்கும் தெரியும்.

நிருபர் : இப்போது உள்ள பிரச்சனை இந்த பணத்துக்கான கணக்கை ஜெயதேவனும் சௌந்தரராஜனும் காட்டாமல் இருப்பது மட்டும் தானா?

சிவராஜா : ஆம். கடந்த 3 ஆண்டுகளாக ஆலய கணக்கு வழக்கு காட்டப்படவில்லை. அதனை அடியார்கள் என்னிடம் கேட்கிறார்கள். மேலும் கோவில் உண்டியலை வீட்டுக்கு கொண்டு செல்வது இது பற்றி எல்லாம் அடியார்கள் என்னிடம் முறையிடுகிறார்கள். நான் ஜெயதேவனிடமும் சௌந்தரராஜனிடமும் கேட்கிறேன் ஆனால் எந்தப் பயனும் இல்லை. அடியார்கள் வந்து என்னை கூட்டத்தை கூட்டும் படி கேட்கும் போது என்னால் மறுக்க முடியாது. அதனால் தான் மே மாதம் 10ம் திகதி கூட்டம் கூட்டப்பட்டது. அதற்குப் பின் நடந்தது தான் உங்கள் எல்லோருக்குமே தெரியுமே.

நிருபர் : கோவிலில் பொலிஸாரின் தலையீடு பற்றி உங்கள் கருத்து என்ன?

சிவராஜா : ஜெயதேவனும், சௌந்தரராஜனும் தான் பொலிஸாரை அழைத்து இருந்தார்கள். தற்போது அந்த பொலிஸ் இன்ஸ்பெக்ரர் தான் விட்ட பிழையை உணர்கிறார். ஜெயதேவனுக்கும் அவருடன் கூட இருந்த ஒரு சிலருக்குமாக அங்கு திரண்டு இருந்த நூற்றுக் கணக்காண மக்களின் ஜனநாயக உரிமையை மீறயதாக அவர் மீது பலரும் கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் யாரும் வன்முறையில் ஈடுபடவில்லை. குகன் ஐயா தனது ஐயர் என்ற ஸ்தானத்தை மறந்து கேலமாக நடந்து கொண்டார். அதோடு நாங்களும் கூட்டத்தை இரவில் வைத்ததாலும் வெம்பிளிப் பகுதியில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு இருந்ததாலும் பொலிஸார் அவசரப்பட்டு கூட்டத்தை கலைத்த விட்டனர்.

நிருபர் : அர்ச்சகள் குகன் சிவலிங்கத்தை தும்புகட்டையால் அடிக்குமளவுக்கு கேவலமாக நடந்து கொண்டாரே?

சிவராஜா : ஜெயதேவன் குகன் ஐயாவுக்கு கூட்டத்தை எப்படியும் குழப்பும் படி கேட்டிருக்க வேண்டும். அதனால் தான் ஒன்பது மணிக்கு முடிக்கின்ற பூசையை 9:45 வரை இழுத்து அடித்தார். அத்தோடு இந்தக் கூட்டம் ஒழுங்காக நடைபெறாது என்றும் சாபம் கொடுத்தார். பின்னர் நீங்கள் சொன்னது போல் கேவலமாக நடந்து கொண்டார்.

நிருபர் : இந்தச் சம்பவங்களுக்குப் பின்னர் ஆலயம் யாருடைய பொறுப்பில் உள்ளது? பூசைகளை யார் செய்கிறார்கள்?

சிவராஜா : பொறுப்பு தலைவர், செயலாளர் என எல்லோருடைய கையிலும் இருக்கிறது. அந்த ஐயாவை நாங்கள் பூசை செய்ய அனுமதிக்கக் கூடாது தான். ஆனால் இப்ப நாங்கள் சட்ட நடவடிக்கைக்கு போய்க் கொண்டு இருக்கிறோம். அதனாலே நான் போய் ஐயாவை கோயிலை விட்டு போகும் படி சொல்லவில்லை.

நிருபர் : கோயிலின் எதிர்காலம் என்ன?

சிவராஜா : சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பாளர் பிலிப் பெரி, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பரி காடினர் போன்றவர்கள் இப்பிரச்சினையை சுமுகமாக தீர்க்க முயற்சிகளை மேற்கொண்டு உள்ளனர். பொதுக் கூட்டத்தை கூட்டு முன்னரும் இப் பிரச்சனை ஜெயதேவனுடன் பல மணித்தியாலங்கள் பேசியிருக்கிறேன். அவருக்கு கேட்கும் தன்மை சிறிதளவும் இல்லை. அடியார்கள் மற்றுமோர் பொதுக் கூட்டத்தை கூட்டவும் ஏற்பாடு செய்து வருகின்றனர். அந்தக் கூட்டத்திற்கு நான் பிலிப் பெரியையும் அழைக்க உள்ளளேன். அதன் மூலம் அவரால் உண்மையான பிரச்சினையை விளங்கிக் கொள்ள முடியும்.

நிருபர் : நீங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக குறிப்பிட்டு இருந்தீர்கள் யாருக்கு எதிராக இந்த நடவடிக்கை?

சிவராஜா : இது தனிநபர்களுக்கு எதிரானது அல்ல. ஆலய நிர்வாகக் குழு ஒழுங்காக யாப்பை தயார் செய்து, அதை அடியார்களின் ஆதரவோடு பெருப்பித்து, மேலும் அடியார்களுக்கு சேவை செய்யக் கூடியதாக மாற்றுவது தான் எனது நோக்கம்.

மேலும் இப்பிரசூரம் வெளியான பிறகு எமக்கு வருகின்ற ஒவ்வொரு தகவல்களும் அடுத்த இதழில் பிரசுரம் செய்யப்படும்.

## ஈழபதீஸ்வரர் ஆலயநிர்வாகத்தின் செயலாளர்

## ஜெயதேவனிடம் உதயன் பேட்டியின் முயற்சி தோல்வி

கடந்த மே 15ம் திகதி காலை 10.30 மணியளவில் எமது நிருபர் ஈழபதீஸ்வ ஆலய செயலாளர் திரு. ஜெயதேவனிடம் ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் நடந்த கலவர சம்பவம் குறித்து பேட்டிகான முனைந்தார். தொலைபேசியில் ஜெயதேவனிடம் தொடர்பு கொண்டபோது அவர் தாம் மிகவும் பிஸியாக் இருப்பதாகவும் இப்போது இந்த பிரச்சனை குறித்து தாம் இப்போது உங்களுடன் பேட்டி கொடுக்க இயலாது. நீங்கள் இப்போது வெகு சிக்கலான விடயத்தை குறித்து பேட்டிகான விரும்புகின்றீர்கள். என்னுடைய நேரகுறைவின்மை காரணமாக நான் உங்களுடன் இப்போது போட்டியளிக்க இயலவில்லை. இன்று இரவு 9.00மணியளவிலோ அல்லது நாலை பிற்பகள் 2.00மணியளவிலோ தான் என்னால் உங்களுக்கு நேருக்கு நேர் உரிய ஆதாரங்களுடன் பேட்டி கொடுக்க முடியும் என்று கூறினார். நான் இன்று இரவு 8.30மணி வரையிலும் நேரம் ஒதுக்கமுடியாது.

உங்களின் கவனத்திற்கு மேலும் மூன்று பேர்களை இந்த பேட்டிக்கு இனைத்துக்கொண்டு நடந்த விடயங்களை எடுத்து சொல்ல விரும்புகிறேன்.

நீங்கள் கேட்ட இந்த விடயத்தை நான் லெட்டர் மூலமாக Press Complaints Commissionக்கும் இந்த தகவலை அனுப்பியிருக்கேன். அதனுடைய நகலை உங்களுக்கும் Fax மூலமாக அனுப்பியிருக்கிறேன் என்று உதயனுக்கு தெரிவித்திருந்தார். அவரால் இரண்டு நேரங்களுமே பேட்டி எடுக்க சரிவராத நேரங்களாகும். பிறகும் எமது நிருபர் பலவழிகளில் முயற்சி செய்தும் அவரின் தொடர்பு கிடைக்கவில்லை. கடைசியாக அவரின் அலுவலகமான TCHA நிருவனத்திற்கும் தகவல் கொடுத்தும் அவர் தொடர்பு கொள்ளவில்லை. பிறகு ஒரு மொட்டை கடிதம் மட்டும் எமது அலுவலகத்திற்கு வந்தது. அதில் சிவராஜாவைபற்றி குற்றசாட்டுகள் குறிப்பிட்டு எழுதியிருந்தது. மீண்டும் தொடர்பு கொண்டும் பயனில்லை. காரணம் ஏன் தவிர்த்தார் என்பது புதிராக உள்ளது. இந்த செய்தி வெளியாகியதும் அவரிடமிருந்து எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெறின் அடுத்த இதழில் பிரசுரிக்கின்றோம்.

## ஜேர்மன் பிள்ளையார் கோவிலில் பிரச்சனை


## 125,000இயூரோ தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில்

ஜேர்மன், ஸ்ருட்காட் நகரில் அமைந்திருக்கும் சித்தி விநாயகர் ஆலயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டு இருக்கிறது. இவ்வாலயத்தின் 125,000 இயூரோ நிதி பற்றியே இந்தப் பிரச்சனை எழுந்து உள்ளதாக ஸ்ருட்கார்டில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாலயத்தின் நிதியை கைப்பற்ற தீவிர அரசியல் அமைப்பு தலையீடு செய்வதாக கோவிலின் ஸ்தாபகர்கள் துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் தெரிவித்து உள்ளனர். பழைய நிர்வாகம் எதுவும் செய்யவில்லை புதியவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கும் படி சிலர் கோரி வருகின்றனர். இந்தப் புதியவர்கள் கோவில் வழிபாட்டுக்கு வந்தவர்களா? இந்து மத வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்தவர்களா? ........... போன்ற கேள்விகள் தங்களிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க கோருவோரிடம் கேட்கப்பட்டு இருக்கிறது.


## மக்களின் பார்வைக்கு

## உதயன் பத்திரிக்கைக்கு கிடைத்த ஈழபதீஸ்வர ஆலயத்தின் இரண்டுபக்க குற்றசாட்டுகளையும் மக்களின் பார்வைக்கு அளிக்கின்றோம்

### சிவராசாவின் குற்றசாட்டு




£3000 பெரம்பலம் சௌந்தரராஜனுன் £5000 ஜெயதேவன் பெயரிலும் எடுக்கப்பட்ட பணத்திற்கான காலோயின் ஆதார நகல் 10.5.02 அன்று வெளியிடபட்டது



Mismanagement and Misappropriation of Public Funds

கோவிலின் பணம் கையாடல் செய்யப்பட்டதாக Charity Commissionக்கு கொடுக்கப்பட்ட புகார்



Leaseஐ தங்களது பெருக்கு மாற்றிக்கொண்டார்கள் (அப்படியென்றால் முதலில் Lease யார் பெயரில் இருந்தது என்பது உதயனுக்கு இன்னும் கிடைக்கவில்லை)



கோவிலினுடைய பணம் நல்ல முறையில் பயன்படுத்தப்படவல்லை. கோவிலின் பணங்கள் தமது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்துவது முறையானதல்ல. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### ஜெயதேவனின் குற்றசாட்டு

I enclose a copy of the bank statement of the temple to show payment of £450 to Mr Sivarajah by standing order. I was told that there are further transactions involving him including his businesses. One of the main transactions was through his good friend amounting to £9000.

எங்களை குறை சொல்லும் சிவராசா மட்டும் யோக்கியரல்ல. அவரும் கோவிலின் பணத்திலிருந்து மாதாமதம் £450ஐ பணத்தை வாடகை என்ற பெயரில் எடுத்ததும் தமது சொந்த இலாபத்திற்காக £7000ஐ தனது நன்பர் சாந்தகுணவடிவேல் ஊடாக போட்டு ஏடுத்த பணம்? நன்பர் சாந்தகுணவடிவேல் ஊடாக கடன் என்ற பெயரில் போட்டு எடுத்த பணம். இதனுடைய HSBC Bank Statement கீழே காணப்படுவது.





பணம் மாற்று செய்யப்பட்டதற்கான HSBC Bank Statement

ஈழபதீஸ்வரர் ஆலயம் Tamil Detainees Support Groupக்காக 20.5.2001ல் இருந்து 8.1.2002 வரைக்கும் £12,122 கொடுத்துள்ள பணம் இன்று வரை அந்த பணம் சென்று அடைந்ததற்கான முழு கணக்கு விவரங்கள் ஈழபதீஸ்வரர் ஆலயத்திற்கு கிடைக்கப்பெறவில்லை. இந்த Tamil Detainees Support Groupக்கு முக்கிய பங்குதாரரான சிவராசா அந்த பணத்தை ஊரில் தனது சொந்தக்காரர்களுக்கும் நன்பர்களுக்கும் கொடுத்திருக்கின்றார்.அத்துடன் திரு சிவராசா அவர்கள் எமது ஆலய நன்கொடையை இலங்கையில் உள்ள முஸ்லீம்களுக்கு கொடுத்துதவியதாக அண்மையில் ஸ்ரீ கானகதுர்க்கை அம்மன் ஆலய இளைஞர் பேரவை கூட்டத்தில் பகிரங்கமாக தெரிவித்தார்.


# பெட்போர்ட் ரோட் பிள்ளையார ஆலயத்தில் மோதல்

தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14ம் திகதி கிழக்கு இலண்டன் பெட்போர்ட் வீதியில் உள்ள பிள்ளையார் கோயிலில் இரு பக்தர்கள் மோதிக் கொண்டனர். கும்பிட்டு கொண்டிருந்த இளைஞரை ஆலயத்துக்கு வந்த மற்றொருவர் முறைத்துப் பார்த்து உள்ளார். அதனை அடுத்து பார்வைக் கலப்பு போய் கைகலப்பு ஏற்பட்டது. சம்பவம் பற்றி தெரியவருவதாவது ஆலயத்துக்கு எரிபொருள் நிலைய முகாமையாளர் ஒருவர் வந்துள்ளார். இவரது நிலையத்தில் வேலை செய்த இளைஞன் அத்தினத்தில் வைப்புக்கு அனுப்ப வேண்டிய பணத்தை களவாடி உள்ளார். வழிபாட்டுக்கு வந்த முகாமையாளர் அந்த இளைஞனை கண்டதும் முறைத்து உள்ளார். அதனை தொடர்ந்து மோதல் ஏற்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர் உதயனுக்கு தெரிவித்தார்.

# Selfridge கேக்கில் பிள்ளையார் உருவம்

Selfridge சுப்பர் மாக்கற் தனது கிளைகளில் பிள்ளையார் உருவத்தை கொண்ட கேக்கை விற்பனைக்கு விட்டு உள்ளது. மே மாதத் தொடக்கத்தில் Selfridge சுப்பர் மாக்கற் மேற்கொண்ட இந்த வியாபார முயற்சி இந்துக்களிடம் இருந்து பலத்த கண்டனத்தை பெற்றது. அதனைத் தொடர்ந்து அந்தக் கேக்குகள் சுப்பமார்க்கற்றில் இருந்த மீளப்பெற்றுக் கொள்ளப்படும் என அச்சுப்பர் மார்க்கற் உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஆனாலும் அவர்கள் அக்கேக்கை மீளப்பெறவில்லை. அதனைத் தொடர்ந்து இந்துக்கள் அச்சுபபர் மக்கற்றில் கொள்வனவு செய்வதை நிறுத்தும் படி கூறும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அதனை அடுத்து தமது தவறுக்கு வருத்தம் தெரிவித்ததுடன் அது பற்றி விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

## சிங்கார வேலரின் சிரிப்பு கொத்து







# சற்குரு சுவாமிகள் கண்டனம்

ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் இந்துக்களுக்கு மிகவும் அபகீர்த்தியை உண்டு பண்ணுவதாக உள்ளது என சற்குரு ரவிக்குமார் சுவாமிகள் கண்டனம் தெரிவித்து உள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் இறைவனின் பிம்பத்திற்கு தொண்டு செய்ய வேண்டிய பணியாளரே(அர்ச்சகரே) இறைவனின் பிம்பத்தை அவமதித்து தும்புகட்டையால் அடித்து, அமைதியுடன் விளங்கவேண்டிய ஆலயத்தை அல்லோலப் படுத்தியது என்பதை உன்மையான இந்து சமயத்தினரும் தெய்வ பக்தி உடையவர்களும் இதனை ஒருபோதும் மண்னிக்க முடியாத குற்றமாகும். அங்கு அத்தனை பக்கர்கள் முன்னிலையில் இப்படி கோவிலில் பணியாற்றும் ஒரு பிராமணன் தனது பூநூலை அறுத்தெறிய முற்பட்டது இந்து சாஸ்திர தர்மத்தையே அவமதித்தது போன்றதாகும். ஒரு நிர்வாகத்திற்குள் நிறைகுறைகள் இருப்பின் அதனை ஒழுக்கத்துடன் சம்பந்தப் பட்டவர்களே தீர்த்து கொள்வதுதான் முறையாகும். அவரவர் எந்தெந்த பணியை செய்ய வேண்டுமோ அதில் அவரவர் தனது வட்டத்திற்குள் அதனை ஒழுங்கான முறையில் செயல்படுத்த வேண்டும். அதை விடுத்து பக்தர்களின் பக்தி நேரங்களை வீணாக்குவதும் அபகீத்தியான வார்த்தைகளை ஆலயத்திற்குள் உபயோகப படுத்துவதும் மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

மேலை நாடுகளில் பொதுவாக மக்களுக்கு இறைபக்தி அதிகம் என்று இந்தியா இலங்கையில் அதிகமாக நம்பப்படுகின்றது. ஆனால் நாஸ்திகத்தை மிஞ்சுகின்ற அளவிற்கு இங்கே நடைபெறுகின்ற சம்பவங்கள் உன்மையான பக்தி உள்ளவர்களின் பெயருக்கே பங்கம் விளைவிப்பது போன்று இருக்கின்றது. ஒருவரை ஒருவர் அடித்துகொள்ளுவதும், தூஷிப்பதும், ஆலயங்களுக்குள் வித்தியாசம் பாராட்டுவதும், ஊருக்கு ஊர் மக்கள் வித்தியாசம் பாராட்டுவதும் கேட்பவருக்கு மிகவும் அருவருக்கத்தக்க வகையில் உள்ளது. இந்தியாவிற்கு ஒரு தெய்வமும், இலங்கைக்கு ஒரு தெய்வமும், லண்டனுக்கு ஒரு தெய்வமும் கிடையாது. ஒரே தெய்வம் தான் என்பது முற்றும் உன்மை. இதனை முதலில் யாவரும் மனதில் கொண்டு ஒழுங்காக செயல்பட்டால் எங்கும் அமைதி நிலவும். இதுபோன்ற அர்ச்சகர்கள் இன்றைக்கு ஆலயங்களில் பணிபுரிவதினால் சாஸ்திர தர்மங்கள் ஆச்சார அனுஷ்டாநங்கள் யாவும் மறைந்துவிடும். ஆகவே இதுபோன்ற செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களை அந்தந்த நிர்வாகங்கள் வண்மையாக கண்டித்து அபராதம் விதித்தி பதவி நீக்கம் செய்யவேண்டும். எல்லா இடங்களிலும் கோவில்கள் அமைப்பது வெகு சுலபம். ஆனால் அதனை ஒழுங்கான முறையில் பராமரித்து பத்தர்களுக்கு வழிபட ஏதுவாக அமைப்பது மிகவும் கடினம். இந்த அர்ச்சகருக்கு அந்த நிர்வாகத்தினர் உடனடியாக பதவிநீக்கம் செய்வது என்பது உத்தமமாகும்.

இந்த அர்ச்சகரின் செயல் உன்மையாக பக்தியுடன் செயல் படுகின்ற மற்றவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் உண்மையான பிராமண குலத்திற்கே களங்கத்தை ஏற்படுத்திவிடும்.

அப்பணியாளரை தொடர்ந்தும் ஆலயப் பணிகளில் ஈடுபடுத்துவது இறைவனை அவமதிப்பதாகவே அமையும் எனவும் சுவாமிகள் தெரிவித்தார். அவர் இந்து ஆலயங்களுக்கு விடுத்த வேண்டுகோளில் இறைவனை அவமதிப்பு செய்த குகன் என்ற அந்த அர்ச்சகர் ஆலயப் பணிகளில் ஈடுபடுவதை அனைத்து ஆலயங்களும் தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்ததுள்ளார்.

இப்படியானவர்களை தொடர்ந்தும் பணிகளில் ஈடுபடுத்தினால் அது மற்றவ!ர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகிவிடும். ஆலயத்துக்க வரும் பக்தர்களுக்கும் வழிபாட்டை மேற்கொள்ள அசௌகரியமாக இருக்கும் எனவும் சுவாமிகள் தெரிவித்தார்.

## சிங்கார வேலரின் சிரிப்பு கொத்து




ஒருவர்: உங்களை எங்கோ கண்டமாதிரி இருக்கே!

மற்றவர்: என்ன இப்படி கேட்கிறீங்க நான் கார் பூட்ல பிள்ளையார் கோவில் வச்சிருக்கேன். ஆனால் கூட்டம்தான் கோவிலுக்கு வருகுதில்லை.

ஒருவர்: அப்ப உங்க கார் நம்பரை எங்க ரேடியோவிலே விளம்பரம் போடுங்க. அப்புறம் பாருங்க கூட்டம் எப்படி நிரம்பி வழியுமுன்னு.



என்னய்யா இப்படி அடையாளம் தெரியாம மாறிட்டிங்க.

அடபோப்பா. வரவர எங்கட சனத்தை நம்பி எந்த தொழிலையும் செய்ய முடியல. நானும் நறைய பிசினஸ் செய்து பாத்துட்டன். நடனசபா, நாடக நபா, இலக்கிய சபா, கலை மன்றம்னு. எதுவுமே கை கூடல.

உங்க வீட்டுல லாப்ட் இருக்குதானே. ஒரு கோவில் திறந்தா மில்லியனராயிடுவீங்க...அப்புரமென்ன அகவுன்ட்ஸ்செல்லாம் நானே பாத்துக்றேன்.




என்ன மாமியும் மருமகளும் ஒரே சந்தோஷமா இருக்கீனம்.

அவேகள் பக்கத்துல உள்ள செமெட்ரில கோவில் திரந்திருக்கீனும். நிறைய பணம் வரும் தானே. அதுதான்.

# இந்திய மொழிகள் தப்பித்து உள்ளன

உலகின் வெவ்வேறு பகுதிகளில் பேசப்படும் 6,000 மொழிகளில் 3,000 வரையான மொழிகள் ஆபத்துக்கு உள்ளாகி உள்ளன அல்லது அழிந்து விட்டன என ஐ நாவின் கல்வி, கலாச்சார, விஞ்ஞானவியல் அமைப்பான யுனெஸ்கோ (UNESCO - United Nation Educational, Cultural and Scientific Organization) தெரிவிக்கின்றது. இந்தியாவின் மொழிக் கொள்கை இந்திய மொழிகளுக்கு ஆதரவாக உள்ளது. மொழிவாரியான மாநிலங்கள் மொழிகளுக்கு ஆதரவு அளித்த போதும் தமிழகத்தின் ஆங்கில, ஹிந்தி மோகம் தமிழ் மொழியின் எதிர்காலம் பற்றி அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

அழிந்து போய்க் கொண்டுள்ள மொழிகளில் 50 ஐரோப்பிய மொழிகளும் அடங்குகிறது. பெருமளவில் மொழிகள் அழியும் இடமாக ஆபிரிக்கா உள்ளது. அங்குள்ள 1400 மொழிகளில் 500 மொழிகள் அழிந்து கொண்டுள்ளது. 250 மொழிகள் அழியும் நிலையில் உள்ளது. அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் குடியேறியதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மொழிகள் அழிந்துவிட்டது. அப்பகுதியில் தற்போது 150 சுதேசிய மொழிகளே பயன்பாட்டில் உள்ளது.


தமிழ் மொழியின் எதிர்காலம் பற்றி குறிப்பிட்ட தமிழ் சிந்தனையாளர் ராஜாநித்தியானந்தன் தமிழ் மொழி இன்னும் 500 ஆண்டுகளில் பண்பாட்டு விழுமியத்தை பேணும் மொழியாக பாதுகாக்கப்படும் என்றும் பாவனையில் அது பயன்படுத்தப்படமாட்டாது என்றும் தெரிவித்திருக்கின்றார்.

# பிரித்தானிய செய்தியாளருக்கு சோதனை மேல் சோதனை

பிரித்தானியாவில் இருந்து வெளியாகும் டெய்லி ரெலிகிறாப் பத்திரிகையின் நிருபர் போல் ஹரிஸ் கிளிநொச்சியில் ஏனைய நிருபர்களைக் காட்டிலும் கடுமையான சோதனக்கு உட்படுத்தப்பட்டு உள்ளார். விடுதலைப் புலிகளின் பத்திரிகையாளர் மாநாட்டுக்கு சென்ற 250 வரையான பத்திரிகையாளர்களில் ஒருவரான இவர் திடிரென கடும் சோதணைக்கு உட்படுத்தப்பட்டது பற்றி விளக்கமளிக்க மறுக்கப்பட்டு உள்ளது. இவருடன் மற்றுமோர் சிங்களப் பத்திரிகையாளரான ஜெயசேகராவும் கடும் விசராணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது மல்லாவியில் மேற்படி நிருபர்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்த கோகுலன் தலைமையிலான குழுவினர் மாலை ஒன்பது மணியில் இருந்து 3 மணித்தியாலங்களுக்கு கடும் சோதணையை மேற்கொண்டு உள்ளனர். இச்சோதணையில் போல் ஹரிசும், ஜெயசேகராவும் விசேட கடும் சோதணைக்கு உட்படத்தப்பட்டு உள்ளனர்.

ஜெயசேகரா விடுதலைப் புலிகளின் சிறுவர் இராணுவம் பற்றியும் போல் ஹரிஸ் கரிகாலனுடனான நேர்முகத்தில் அவர் முஸ்லீகம்கள் பற்றி அளித்த கண்ணோட்டமும் பிரசுரிக்கப்பட்டதே அதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என கொழும்புப் பத்திரிகை ஏப்ரல் 11ம் திகதி செய்தி வெளியிட்டு உள்ளது. கரிகாலன் அவரது பேட்டி தொடர்பாக கிழக்கில் இருந்து அழைக்கப்பட்டு உள்ளார் எனவும் அச்செய்தி கூறுகிறது. மேலும் போல் ஹரிஸ் Janes Intelligence Review ல் சர்வதேச கிளர்ச்சிகள் பயங்கரவாதம் தொடர்பான விசேட செய்திய... என்பதும் குறிப்பிடத்தக்கது.




## இனவாத கிண்டல் செய்தவர் வெளியேற்றப்பட்டார்

மே மாதம் 3ம் திகதி தனிப்பட்ட இராப்போசன விருந்து வைபவத்தில் இனவிரோத கிண்டல் பண்ணிய செஸ்செயர் தொகுதியின் கொன்சவேடிவ் பாராளுமன்ற உறுப்பினர் அன் வின்ரொன் அக்கட்சியின் முன்வரிசையில் இருந்து அகற்றப்பட்டு உள்ளார். வில்லியம் ஹெக் தலைமையில் கொன்சவேடிவ் கட்சி தீவிர வலது சாரிப் போக்கை கொண்டிருந்ததினால் கட்சி இனவாதிகளின் கூடாரமாக முதத்திரை குத்தப்பட்டு இருந்தது. இந்த தவறான பெயரைத் துடை... எறிவதில் தமிழ் நாட்டில் பிறந்த எ... கட்சித் தலைவர் இயன் டன்கன் சிமித் கடும் பிரயத்தனம் செய்து வருகிறார்.

இராப்போசனத்தில் தான் ஒரு கதை சொல்கிறேன் என ஆரம்பித்த அப் பெண் பாராளுமன்ற உறுப்பினர் பின் வரும் கதையை கூறினார். ஒரு ரெயிலில் ஒரு கியூபா நாட்டவர், ஒரு ஜப்பானியர், ஒரு ஆங்கிலேயர், ஒரு பாகிஸ்தானியர் ஆகியோர் பயணம் செய்தனர். கியூபன் ஹவானா சிகாவை யன்னலினால் வீசி எறிந்தார். ஏன் அப்படி எறிந்தாய் என்று மற்றவர்கள் கேட்டதற்கு தங்கள் நாட்டில் அதன் பெறுமதி 10 பெனி என கியூபன் பதில் அளித்தார். ஜப்பானியர் நிக்கன் கமராவை வீசி எறிந்து விட்டு எனது நாட்டில் இதன் பெறுமதி 10 பெனி என்றிருக்கிறார். ஆங்கிலேயர் அருகில் இருந்த பாகிஸ்தானியரை தூக்கி யன்னலினால் எறிந்தார். மற்றவர்கள் ஏன் என கேட்டதற்கு இவரின் பெறுமதி எங்கள் நாட்டில் 10 பெனி என ஆங்கிலேயர் குறிப்பிட்டார்.

இந்த கிண்டல் வெளியே பரவியதும் பிரபுக்கள் சபையின் வோர்விக் பகுதி கறுப்பின உறுப்பினர் பிரபு ரெய்லர் அன் வின்ரொன் வெளியேற வேண்டும் என்று கோரினார். கட்சித் தலைவர் இயன் டங்கன்சிமித் அன் வின்ரொனின் மன்னிப்பு அவர் ஏற்படுத்திய அபகீர்த்திக்கு போதாது என்று குறிப்பிட்டு அவரை தானாக விலகும் படியும் இல்லையேல் விலக்கப்படுவார் என்றும் எச்சரித்தார். தான் தனது செயற்பாட்டுக்கு மன்னிப்பு கேட்டுவிட்டேன் என்று குறிப்பிட்ட அன் வின்ரொன் பதவி விலக மறுக்கவே அவர் பதவி விலக்கப்பட்டார். அன் வின்ரொனின் கணவர் நிக்கலஸ் மக்கில்ஸ்பீல்ட் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அட்டென்ஷன் ப்ளீஸ்!




ஆம் தரமான வாசகர்களின் நன்மதிப்பினை பெற்ற ஒரே தமிழ் பத்திரிக்கை,

## உதயன்

இன்றே உங்களின் வியாபார பெருக்கத்திற்கு நம்பிக்கையுடன் விளம்பரப்படுத்தக்கூடிய ஒரே தமிழ் பத்திரிக்கை உதயன்.

உதயனில் விளம்பரம் செய்து உங்களின் வியாபாரத்தில் பிரகாசியுங்கள் என்றும்.
தொடர்புகளுக்கு தொலைபேசி:
020 8952 5677 / 07957 681 944

**பிரித்தானிய தேசம் முழுவதும் உண்மையாக கிடைக்கப்பெறும் ஒரே பத்திரிக்கை உதயன்.**

## உதயன்

ஐந்து வருடங்களாக பிரசித்திப்பெற்ற உதயன் தமிழ் தேசிய பத்திரிக்கைக்கு

### நியூஸ் ரிப்போட்டர்ஸ் தேவை

(வீட்டில் இருந்தபடியே வேலை செய்யலாம்)

சமூக மனப்பான்மை உடைய திறமையான பகுதிநேர செய்தியாளர்கள் உடனடியாக தேவை. இன்னும் சில இடங்கள் பூர்த்தியாக உள்ளது.

தகுதி:

பத்திரிக்கை துறையில் ஓரளவேனும் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
தமிழ் டைப்பிங் அவசியம் தெரிந்திருத்தல் வேண்டும்.
வீட்டில் சொந்தமாக கம்ப்யூட்டர் இருத்தல் அவசியம்.
அனுபவமில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
புகைபடத்துடன் விண்ணப்பித்தல் அவசியம்.

South London, North London ஆகிய பகுதிகளில் இருப்பவர்களும் Scotland, Wales ஆகிய பகுதிகளில் விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றது.

நிரந்தரமான நல்ல சம்பளம் வழங்கப்படும்.
Job Contract உண்டு.

கவனிக்கவும்:
உண்மையான தரமான உள்ளூர் செய்திகள் சேகரிக்கப்பட வேண்டும்.
Internet செய்திகள் சேர்த்துக்கொள்ளப் படமாட்டாது.
பிற நிறுவனங்களுக்கு, அதாவது மற்ற ரேடியோ, டீவி அல்லது பத்திரிக்கைகளுக்கு வேலை செய்பவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.

முறையுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

The Editor
**UDHAYAN**
GNM (PVT) LTD.
25 -27 High Street Edgware,
Miidx. HA8 7EE

E-mail மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி:
thelondon@udhayan.freeserve.co.uk

(தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளத் தேவையில்லை)

## உதயன்

ஐந்து வருடங்களாக பிரசித்திப்பெற்ற உதயன் தமிழ் தேசிய பத்திரிக்கைக்கு

### விளம்பர சேகரிப்பாளர்கள் தேவை

(முற்றிலும் fieldwork சம்பந்தமானது)

நல்ல திறமையும் அதிக ஊக்கமுடைய முழுநேர (அ) பகுதிநேர பத்திரிக்கை+டைரக்டரி விளம்பர சேகரிப்பாளர்கள் உடனடியாக தேவை.

நல்ல சம்பளம்+இன்சென்டிவ் (OBT) வழங்கப்படும்.

கமிஷன் அடிப்படையில் மட்டுமே வேலை செய்ய விரும்புகின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Target Achieversக்கு முன்னுரிமை வழங்கப்படும். Note: Job Contract உண்டு.

தகுதி:

விளம்பரத் துறையில் ஓரளவேனும் அனுபவமும், சொந்த வாகனமும் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
நன்றாக ஆங்கிலம் பேச தெரிந்திருத்தல் வேண்டும்.
விடாமுயர்ச்சியும், தன்னம்பிக்கையும், பேச்சுத் திறமையும், சகிப்புத்தன்மையும் அவசியம்.
அனுபவமில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
புகைபடத்துடன் விண்ணப்பித்தல் அவசியம்.

South London, NorthLondon, Central London, Birmingham, Nottingham, Manchester, Leicester ஆகிய பகுதிகளில் மற்றும் Scotland, Wales ஆகிய பகுதிகளில் விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றது.

முறையுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

The Business Manager
GNM (PVT) LTD.
25 -27 High Street Edgware,
Miidx. HA8 7EE

E-mail மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி:
thelondon@udhayan.freeserve.co.uk

**DHIMAN ENTERPRISES**
IMPORTERS, EXPORTERS & WHOLESALE DISTRIBUTORS
TEL: 020 8571 7444 • FAX: 020 8571 7477
UNIT 5, TRIANGLE CENTRE, 399 UXBRIDGE ROAD,
SOUTHALL, MIDDLESEX, UB1 3EJ.

**RISING SUN**
**TELECOM & MUSIC CENTRE**
Mobile Phones Services & Repairs
* Tamil, Malayalam, Telugu Films for Sale or Rental
* For Audio, Video, CD, DVD, VCD & Magazines
* Fax Services Available
* நகை ஒடுக்கு செய்து கொடுக்கப்படும்
* மிகக்குறைந்த விலையில் நேரடித் தொலைபேசித் தொடர்புகள்


Sri Lanka - 20p India - 29p
Pakistan - 34p Europe - 10p

Mob: 07951953951
Tel: 020 8903 4568
7 - 8, Meena Bazar
105, Ealing Road,
Wembley, Middx. HA0 43P

**The International Wood Floor Centre**
Finest Flooring Best Prices Guaranteed
* Laminate Click On
* Engineered Board
* Solid Wood
*Herring Bone
Professional Fitting Service Available
Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days
Tel: 020 8951 4395 - 4495
Fax: 020 951 4251
21 North Parade,
Mollison Way, Edgware HA8 5QH

**Transglobe TRAVELS**
Worldwide Travel Services
CMB - £ 440 + Tax
MAA - £ 400 + Tax
Tel: 020 8451 3566
Fax: 020 8451 7730
e-mail: INFO@FLYRUS.COM
WEB: www.FLYRUS.COM
328 High Road Willesden London NW10 2EN
We make your journey safe & more affordable

**No.1 Hindu Directory**
For your Advt.
please contact
020 895677






ADVERTISE
FOR
BEST
RESULTS
020 8952 5677

**தனிச்சிறப்பு ஹோமங்கள்**
கணபதி ஹோமம், சண்முக ஹோமம், ருத்ர ஹோமம், துர்கா ஹோமம்,
காயத்ரி ஹோமம், சண்டி ஹோமம், சந்தான லஷ்மி ஹோமம்
போன்ற ஹோமங்கள் மிக சிறப்பான முறையில் சாஸ்திரமுறைப்படி பயின்ற
நல் அனுபவம் வாய்ந்த பண்டிதர்களால்
காயத்ரி மாதா திருஸ்தலத்தில் மட்டும் நடத்தி கொடுக்கப்படும்.
சிறப்பான முறையில் ஹோமங்கள் செய்ய விரும்பும் பக்தர்கள் தொடர்புகளுக்கு
020 8905 7775

**IMPERIAL CONSULTANTS**
SPECIALIST BUSINESS CONSULTANTS
&
ACCOUNTANCY PRACTICE
- SHOP/BUSINESS FINANCE
- COMMERCIAL PROPERTY FINANCE
- RETAIL SPECIALIST
- RESIDENTIAL MORTGAGE STATUS/NON STATUS/SELF CERT
- RE-FINANCE / CAPITAL RAISING

COME AND SEE US OR CALL US
Mr. Andy Fletcher
235 IMPERIAL DRIVE RAYNERS LANE
T.P: 0208 869 9326
MOBILE: 07930 409095


## ATTENTION TO ADVERTISERS

A good Businessmen knew the benefit of Publicity. Inexperienced people's opinion is not the true reflection of the dimension of reach in the Community. As Community is a massive density of people widely scattered at various geographical locations. UDHAYAN is the only hard-copy which has the massive effective reach. Many Advertisers are coming back, realising the fall in Business. Udhayan welcomes you with open arms. Tap the Tamil Community through UDHAYAN. The only effective media.

**By UDHAYAN - The only National Tamil Newspaper**


**STAR TOURS LTD**
Come once and you'll come again and again....
PARIS HOLLAND ITALY & SWITZERLAND DISCOVER EUROPE SPAIN SWITZERLAND



**PARIS** ADULT £140.00 CHILD £110.00
DINNER IN CRUISE ON RIVER SEINE
PRICE INCLUDES:
TRANSPORT BY LUXURIOUS COACH
2 NIGHT ACCOMMODATION IN 3* HOTEL
WITH BUFFET BREAKFAST
1 EVENING DINNER IN CRUISE ON RIVER SEINE
FULL DAY PASS TO DISNEYLAND PARIS
EIFFEL TOWER TOP FLOOR ENTRANCE
CITY TOUR OF PARIS WITH PERFUM MUSEUM

**HOLLAND** ADULT £160.00 CHILD £125.00 VISIT BRUSSELS
VISIT FLORIADE/ ONCE IN 10 YEARS
PRICE INCLUDES:
TRANSPORT BY LUXURIOUS COACH
2 NIGHT ACCOMMODATION IN 4* HOTEL
WITH BUFFET BREAKFAST
2 EVENING DINNER IN INDIAN RESTAURANT
FULL DAY CITY TOUR OF HOLLAND, VISITS TO
CHEESE & CLOG FACTORY, DIAMOND FACTORY,
FLORIADE FLOWER GARDEN & CANAL CRUISE
BRUSSELS TO VISIT MINI EUROPE & ATOMIUM

**SWITZERLAND** ADULT £259.00 CHILD £219.00 PURE VEG LUNCH DINNER
MT. TITLIS, GENEVA, LUCERNE, INTERLAKEN
PRICE INCLUDES:
TRANSPORT BY LUXURIOUS COACH
4 NIGHT ACCOMMODATION IN 3* HOTEL
WITH BUFFET BREAKFAST
4 EVENING VEGETARIAN DINNER & 4 LUNCHES
MT. TITLIS CABLE CAR RIDE (10,000 ft). FREE
TIME IN INTERLAKEN, LUCERN CITY TOUR,
GENEVA CITY TOUR & GENEVA BOAT CRUISE

**....many more tours available**
8 DAY DISCOVER EUROPE TOUR: ADULT: £490.00 CHILD: £399.00
9 DAY ITALY & SWITZERLAND WITH PARIS: ADULT: £549 CHILD: £449
14 DAY EUROPE TOUR, TAILOR MADE ITINERARY FOR INDIA & FAR EAST,
AUSTRALIA & NEW ZEALAND TOUR AND SPAIN RELAXING HOLIDAY

CALL NOW FOR MORE INFORMATION OR FOR OUR 2002 BROCHURE
TEL: 020 8427 2224, or visit www.startours.co.uk
STAR TOURS LTD, 15 A BROADWALK, PINNER ROAD,
NORTH HARROW, HA2 6ED. FAX: 020 8427 8336



BODY WARMERS • HIKING BOOTS
**HARTEX**
Established 1969
**THE GREAT OUTDOORS**
PULLOVERS
COOKWARE
TENTS
RUCKSACKS
HAMMOCKS
HEADWEAR
MAPS
GAITERS
SHORTS
SOCKS
THERMAL
UNDERWEAR
GROUND
SHEETS




COMBAT
CLOTHING
RAINWEAR
BOOTS
GLOVES
BELTS
WATER
BOTTLES
BODY
WARMERS
WEBBING
HIKING
SOCKS
FOAM MATS
AIR BEDS

TENTS • SLEEPING BAGS • AIR BEDS • MAP CASES
RAINWEAR • CUTLERY SETS AND PLATES • WATER BOTTLES
COMPRESSOR BAGS • MONEY BELTS

55 Victoria Road
Ruislip Manor
Middlesex HA4 9BS
TEL: 01895 634244

321 Northolt Road
South Harrow
Middlesex HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS